விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

SATS TECH
யாழ் நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 21 செவ்வாய்க்கிழமை (03.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167

# கடும் மழையினால் 13 பேர் பலி

# 2 இலட்சம் பேர் இடப்பெயர்வு

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரோமை சென்றடைந்தார்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை ரோமிலுள்ள லியனாடோ டாவின்சி விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

இத்தாலியின் இராஜாங்க அதிகாரிகள் உட்பட இலங்கையின் இத்தாலிக்கான தூதுவர் ஹேமந்த வர்ணகுலசூரிய ஆகியோர் ஜனாதிபதி தலைமையிலான பிரதிநிதிகள் குழுவை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

ஐ.நாவின் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் மாநாடு இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த மாநாட்டின் ஆரம்ப அமர்வின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை நிகழ்த்தவுள்ளார். (சு-5)

## பல கிராமங்கள் நீரில் மூழ்கும் அபாயம்

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் பல பாகங்களிலும் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கடுமையான மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக இதுவரை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள் இருவர் உட்பட சுமார் 13 பேர் இறந்துள்ளனர். ஏறத்தாழ 53 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் அதிகமானோர் வீடு வாசல்களையிழந்து பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் மகசீனுக்கு மாற்றம்

(கொழும்பு)

மகசீன் சிறைச்சாலையிலிருந்து கடந்த மாதம் 10 ஆம் திகதி பூசா முகாமுக்கு இடமாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் 68 பேரும் மீண்டும் மகசீன் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மகசீன் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்ட அதே நேரம் நேற்று அவர்களின் உடமைகள் யாவும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மைப் பூசா (10 ஆம் பக்கம் பார்க்க)

# ரி.எம்.வி.பியைச் சேர்ந்த இருவர் மட்டக்களப்பில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்அமைப்பைச் சேர்ந்த எருவில்பற்றுப் பிரதேச சபையின் உப தலைவரும் அவரது உதவியாளரும் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆட்டோவில் வந்தவர்களே இவர்கள் இருவரின் மீதும் துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எருவில்பற்றைச் சேர்ந்த ஐயாத்துரை புஸ்பநாதன், அவரது உதவியாளர் அற்புதராஜன் ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது இருவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காத்தான்குடிப் பகுதியில் தோன்றிருக்கும் பதற்ற நிலையைத் தணிப்பது தொடர்பாகக் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பிள்ளையான், மாகாண சபை அமைச்சர் ஹிஸ்புல்லாவை முதலமைச்சர் அலுவ (10 ஆம் பக்கம் பார்க்க)



கடும் மழையினால் வீட்டினுள் வெள்ளம் புகுந்ததையடுத்து இடம்பெயரும் ஒரு குடும்பம்.

## குண்டு வெடித்ததில் சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வெடிபொருள் ஒன்றை எடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது அது வெடித்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தார். மேலும் இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று கட்டுவன் தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதேயிடத்தைச் சேர்ந்த விஜயயோகராஜா தனேஷ் (வயது-9) என்ற சிறுவனே உயிரிழந்தவர் ஆவார்.

இச் சிறுவனுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் முன்னகர்வைத் தடுக்க விடுதலைப்புலிகளுக்கு வாய்ப்பில்லை

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் வெற்றிகரமாக முன்னேறி வரும் இராணுவப் படையினரைக் கட்டுப்படுத்த விடுதலைப்புலிகளுக்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வன்னிப் பிரதேசத்திற்கு மேற்கொண்ட விஜயத்தைத் தொடர்ந்து இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

வெலிஓயா மற்றும் வன்னிப் பகுதியில் அரசாங்கப் படையினரின் இராணுவ நடவடிக்கைகள் மிகவும் திருப்தியளிக்கும் வகையில் காணப்படுவதாகவும் வன்னிப் பகுதியில் எஞ் (10 ஆம் பக்கம் பார்க்க)

# 150 நாள்கள் போராட்டம் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

எரிபொருள் விலை ஏற்றம், பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கண்டித்து இன்று முதல் 150 நாள்களுக்குத் தொடர்ச்சியாக எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து இன்று நாடளாவிய ரீதியில் வாகனங்களை நிறுத்தி வாகனங்களின் விளக்குகளை ஒளிரவிட்டு, வாகன ஒலிகளை எழுப்பும் போராட்டம் நடத்தப்படவிருப்பதாக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கரையோரப் பகுதிகளில் நேற்று திடீர் ஊரடங்கு அமுல்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் நேற்று முற்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து கொழும்புத்துறை முதல் பாசையூர் வரையான கரையோரப் பகுதியில் திடீர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த பற்றிக் வின்சன் (வயது-23) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார். குருநகர் பற்றிக்ஸ் கல்லூரி வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத இருவர் இவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டது. நீதிபதி சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்குமாறு (10 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக அனுமதிக்கான 'இஸட்' வெட்டுப்புள்ளி அடுத்த வாரம் வெளியாகும்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான இஸட் ஸ்கோர் வெட்டுப் புள்ளிகளை ஜூன் மாதம் 2 ஆம் வாரத்தில் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர் அதகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்களை 2007/2008 பல்கலைக்கழக கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகளை இம்மாதத்தின் முதல் வாரத்தில் வெளியிட உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு சில பணிகள் நிறைவுறாத நிலையில் வெட்டுப் புள்ளிகளை 2ஆம் வாரத்தில் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2007 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 3 லட்சத்து 80ஆயிரத்து 234 மாணவர்கள் தோற்றிய போதிலும் ஒரு லட்சத்து 21ஆயிரத்து 421 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமையைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்களில் 19 ஆயிரத்து 650 மாணவர்கள் 14 தேசிய பல்கலைக்கழகங்களிலுள்ள 75 கற்கை நெறிகளுக்காக அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதன் பிரகாரம் கொழும்பு, பேராதனை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆகிய 3 பல்கலைக்கழகங்களுக்கும் முறையே 1905,2375,1160 மாணவர்களும் களனி, மொறட்டுவ,றுகுணு ஆகிய 3 பல்கலைக்கழகங்களுக்கும் முறையே 1855,1160,1625 பேரும் ரஜரட்டை, சப்ரகமுவா, ஊவா வெல்லஸ்ஸ,வயம்ப ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு முறையே 1145,825,410,525 மாணவர்களும் யாழ்ப்பாணம், கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு முறையே 1925,1195,765 பேரும் அனுமதிக்கப்படவுள்ளதோடு சுதேச மருத்துவ நிறுவகத்திற்கு 200 பேரும் கம்பஹா விக்கிரமராச்சி ஆயுர்வேத நிறுவகத்திற்கு 80 மாணவர்களும் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரிக்கு 240 பேரும் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவனத்திற்கு 230 பேரும் மேலும் மேலதிக உள்ளெடுப்பு என்ற நியதியின் கீழ் 650 மாணவர்களும் இக்கல்வி ஆண்டுக்காக அனுமதிக்கப்படவுள்ளனர்.

இவ்வாண்டு இலங்கையின் இன விகிதாசாரத்திற்கு ஏற்ப மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாகவும் சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பாதுகாப்பு சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உத்தேசமான எண்ணிக்கையிலிருந்து தெரிவு செய்யப்படும் உண்மையான எண்ணிக்கைகள் வேறுபடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

# யாழ்ப்பாண சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவகையில் நாட்டின் ஏனைய மாகாணங்களை விட மிகவும் மாறுபட்டதொரு நிலை காணப்படுகிறது என்பதால் எமது வழமையான வேலைத் திட்டங்களை மாற்றியமைத்து இன்றைய சூழ்நிலைகளுக்கேற்ப புதிய வேலைத் திட்டங்களையும் நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் கீழும் மாகாண சபையின் கீழும் யாழ். குடாநாட்டில் செயற்பட்டு வருகின்ற சமூக சேவை உத்தியோகத்தர்களை நேற்று சந்தித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமூக சேவை உத்தியோகத்தர்கள் வெறுமனே அரச ஊழியர்களாக மட்டுமின்றி சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களாகவும் செயற்பட முன்வரவேண்டும். அவ்வாறு முன்வருவதன் மூலம் எமது சமுதாயத்தை தூக்கி நிறுத்த முடியும். இல்லையேல் இச்சமூகம் நாளடைவில் அழிந்து போய் விடக்கூடும் என தெரிவித்தார்.

அரச பணியுடன் சமூகப் பணியையும் அவற்றுக்குரிய அளவு கோல்களுடன் தற்போதைய நிலையை உணர்ந்து செயற்பட முன்வந்தால் குடாநாட்டில் தற்போது நிலவுகின்ற இந்தச் சூழ்நிலையை வெகுவிரைவில் மாற்றியமைக்க முடியும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கான 2008 ஆம் வருடத்திற்குரிய வேலைத் திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு முடிந்த நிலையில் அவற்றினை வெகு சிறப்பாக முன்னெடுப்பது குறித்து யோசனைகளை முன்வைக்கும்படியும் 2009ஆம் வருடத்திற்கான வேலைத்திட்டத்தை குடாநாட்டின் தற்போதைய சூழ் நிலையை முதன்மைப்படுத்தித் தயாரித்து தன்னிடம் சமர்ப்பிக்கும் படியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது கேட்டுக் கொண்டதாக சமூக சேவைகள் அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# தங்கம்மா அப்பாக்குட்டி நலன்பெற வேண்டி பிரார்த்தனை

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி நலம்பெற வேண்டி தென்மராட்சியிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் இன்று அபிஷேக ஆராதனைகளும் பிரார்த்தனையும் செய்யுமாறும் இந்நிகழ்வுகளை ஆலய அறங்காவலர்களும் பரிபாலன சபையினரும் பாடசாலை அதிபர்களும் முன்நின்று நடத்துமாறு சரசாலை ஸ்ரீ வீரமாகாளி தேவஸ்தான பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ச)

# மஹா கும்பாபிஷேகம்

(சித்தன்கேணி)

வட்டு.கிழக்கு – துறட்டிப்பனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை கலை 6 மணி முதல் மாலை 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ஓ-17)

# பாடசாலை நாட்கள் குறைப்பிற்கு பதிலாக கல்வி அமைச்சு மாற்று யோசனைகள்

## அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை

பாடசாலை நாட்களை குறைப்பதற்கு பதிலாக மாற்று யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கல்வி அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் உயர் மட்டத்தினருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்பே இந்த மாற்று யோசனைகள் தயாரிக்கப்பட்டன. இந்த யோசனைகள் அடுத்த புதன்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்தே பாடசாலை நாட்களை குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் அத்தீர்மானம் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதனால் தீர்மானத்தை கைவிட்டு அதற்குப்பதிலாக புதிய யோசனைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கான தனியார் வாகனங்களுக்கு பதிலாக அரச பஸ்களை வழங்குவதற்கான யோசனை ஒன்றும் முன்வைக்கப்படவிருக்கின்றது. இதன் மூலமாக எரிபொருள் விலையேற்றத்தினால் மாணவர்கள் எதிர்கொள்கின்ற பொருளாதார நெருக்கடிகளை குறைத்துக்கொள்ள முடியும் என்றார்.

பாடசாலை நடைபெறுகின்ற 5 நாட்களை 4 நாட்களாக குறைத்து அந்த நான்கு நாட்களுக்கும் பாடசாலையை பிற்பகல் 3 மணி வரை நடத்துவதற்கு கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)





வட்டு.மத்திய கல்லூரியில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை தின நிகழ்வில் மாணவிகள் ஞானசம்பந்தர் பதிகங்கள் இசைப்பதையும் ஆசிரியர் திருமதி பிறேமலோஜி சுதேஸ்குமார் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட 'கொடியநோண்பு' நிருத்திய நாடகக் குழுவினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தில் ஏற்பட்டுள்ள முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2-1 தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.கல்வி வலயத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.கல்வி வலயத்தில் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (அ)

# அறிமுறைப் பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் அறிமுறைப்பரீட்சை எதிர்வரும் 7,8ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். இப்பரீட்சை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நூல் வேனில் புத்தகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண் கலைத் துறையின் கலைவட்டம் நடாத்தும் நூல் வேனில் புத்தகத்திருவிழா இன்றுமுதல் எதிர்வரும் 7ஆம் திகதிவரை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இப்புத்தகத் திருவிழாவை துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பித்துவைப்பார். (ச)

# இரண்டாம் தவணைக்கான உணவுப் பொருள் வழங்கல்

(அல்வாய்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவுக்காக 2ஆம் தவணைக்குரிய உணவுப் பொருள்களில் 40 நாட்களுக்குரியது ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 20 நாட்களுக்கு தேவையான பொருள்கள் வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட செயல் திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ஓ-19)


# பாராட்டி சேவை சிறக்க நீடூழி வாழ வாழ்த்துகிறோம்



திரு.நடராஜா கணேசலிங்கம் (ஜே.பி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவராக ஏகமனதாகத் தெரிவான தென்புலோலி புற்றளைச்சித்தி விநாயகர் தேவஸ்த்தான பரிபாலன சபைச் செயலாளரும் விவாக, பிறப்பு இறப்புப் பதிவாளருமான

திரு.நடராஜா கணேசலிங்கம் (ஜே.பி)

அவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டிச் சேவை சிறக்க வாழ்த்துவதோடு அவர் நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.யோகேந்திரநாதன் (தும்பளை)
ச.இராசேந்திரம் (புலோலி)
வே.சூரியகுமார் (புலோலி)

03.06.2008

(C-1183)

## இன்று ஒரு தகவல்

# மேலதிகாரி

அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர் வந்தார். "பேசாம பத்துநாள் லீவு எடுக்கலாமா? என்று யோசிக்கிறேன்" என்றார்.

"ஏன்" என்று கேட்டேன். "என்னுடைய மேலதிகாரி சரியான கோபக்காரர் அவரிடம் வேலை செய்வது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது" என்றார். அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்!

மேலதிகாரியானவர் ஒரு பெரிய மகான் இல்லை! அவரும் ஒரு மானிடப்பிறவிதான். சராசரி மனிதனுக்கு உள்ள பலம்-பலவீனம் இரண்டும் அவருக்கு உண்டு. அதனால் அவரைக் கொஞ்சம் அனுசரித்துப்போக பழகிக்கொள்ள வேண்டும்.

மேலதிகாரிகளில் பலவகை உண்டு. முதலாவது வகையினர் உங்களை ஒரு வேலை செய்யும் இயந்திரமாக மட்டுமே நினைப்பார்கள்.

இவர்களெல்லாம் எப்படியென்றால்... எங்கேயாவது வெளியூர் போயிருந்தால்கூட அங்கிருந்து போன் பண்ணுவார்கள்... உங்கள் நலனைப் பற்றியோ உங்கள் குடும்பத்தைப் பற்றியோ அக்கறை இருக்காது! நீங்கள் சொல்லும் யோசனையைக் கூட ஏற்கமாட்டார்கள். எனக்குப் புத்திசொல்ல வேண்டாம் என்பார்கள்.

இவர்களை அனுசரித்துப்போக ஒரேவழி... இவர்கள் என்ன சொன்னாலும் "சரி" என்று சொல்லி வேலை யைக் கவனிக்க வேண்டியதுதான். எந்தக் கேள்வியும் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

இன்னொருவகையான மேலதிகாரிகளும் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் அலுவலக வேலையைப் பற்றி அதிகமாக கவலைப்படமாட்டார்கள். தங்களுடைய "இமேஜ்" பாதிக்கப்படக்கூடாது என்பதில் கவனமாக இருப்பார்கள். உங்கள் நலனையும் அடிக்கடி விசாரிப்பார்கள். அதே போல் நீங் களும் அவரை விசாரிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அலுவலக வேலையை மட்டும் பார்க்கும் பணியாளர்கள் இவர்களிடம் நல்ல பெயர்வாங்க முடியாது.

இன்னொருவகை மேலதிகாரிகளும் உண்டு. அவர்கள் அலுவலக வேலையைப் பற்றியோ தனக்குக் கீழ் வேலை செய்பவர்களைப்பற்றியோ கவலைப்படமாட்டார்கள். எக்காரணம் கொண்டும் தன்னுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்று நினைப்பார்கள்.

இவர்களால் கடுமையாக வேலை செய்யவும் முடியாது. தீர்மானிக்கவும் முடியாது. வேலை செய்வோருக்குத்தான் பொறுப்பு அதிகமாகும். இவர்களிடம் போய் பிரச்சினையை மட்டும் சொல்லி பிரயோசனமில்லை. அதற்கான முடிவையும் நீங்கள் தான் சொல்ல வேண்டும். இந்த மாதிரி அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்கலாம்!

அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் முக்கியமாக சில விஷயங்களை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அலுவலகத்தில் நடப்பது நல்லதோ, கெட்டதோ உடனடியாக மேலதிகாரியிடம் தெரிவிக்கவேண்டும். மூன்றாவது நபர் மூலமாக அதை அவர் தெரிந்துகொள்வது அவ்வளவு நல்ல தல்ல!

எந்த மேலதிகாரியும் தன்னை மிஞ்சி செயற்படுவதை விரும்புவதில்லை. அதனால் அவருக்கு தெரியாமல் மேலிடத்துக்கு மனு எழுதிப் போடாதீர்கள். நீங்களும் உங்கள் மேலதிகாரியும் தொழில்ரீதியாக ஒரேபடிப்பு படித்தவராக இருந்தால் அனுசரித்துப்போவது கொஞ்சம் கஷ்டம் தான். இதை மனதில் வைத்து நடந்து கொள்ளுங்கள்.

எல்லாவற்றையும் மனதில் வைத்து சாமர்த்தியமாக செயற்படுங்கள். அலுவலகம் உங்களுக்கு அவஸ்தையாக இருக்காது. ஆனந்தமாக இருக்கும். ஒரு மேலதிகாரி தன்னிடம் வேலை பார்ப்பவர் ஒருவரைப் பற்றி பெருமையாக சொன்னார்.

"எங்கள் அலுவலகத்தில் வேலைசெய்பவர்கள் ஒவ்வொருவரும் தினமும் ஏதாவது பிரச்சினைகளை சொல்வார்கள். இவர் மட்டும் என்னிடம் வந்து எந்த பிரச்சினையும் சொன்னதேயில்லை!" என்றார். நான் உடனே அவ் ஊழியரிடம் விசாரித்தேன் அதற்கு அவர். "ஆமாம்! ஏனென்றால், அவரால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பது எனக்கு நல்லாத் தெரியும்" என்றார் ரொம்பப் பொறுமையாக!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தனிமையினால் ஏற்பட்ட மன அழுத்தமே சிறுவர்களின் கொலைக்கான காரணம்

## உளவளத்துணையாளர்

லண்டனில் உள்ள தமிழ் சமூகத்தவர்கள் போதியளவு உளரீதியான ஆதரவு கிடைப்பதில்லையென கிழக்கு லண்டனிலிருக்கும் இலங்கை உளவளத்துணையாளர் போல் சத்திய நேசன் தெரிவித்துள்ளார்.

வீடுகளில் தனியாக உள்ளவர்களிடம்கதைப்பதற்குஎவரும் இல்லை. வீட்டுப் பராமரிப்பு மற்றும் நலன் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால் மன அழுத்தத்துக்கு உள்ளானால் அது இயலாமல் போய்விடும் என அவர் கூறுயுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை லண்டன் கார்ஷல் எனும் பகுதியில் வசித்து வந்த இலங்கைத் தாயார் ஒருவர் தனது 5 வயது மகனையும் 4 வயது மகளையும் கத்தியால் குத்தி கொலை செய்ததுடன் இந்தச் சம்பவத்தில் 6 மாதக் குழந்தை யொன்று காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறது.

நீண்ட நேரம் வீட்டில் தனியாக இருக் கும் பெண்மணி மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருந்ததாக அவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். படுகொலை செய்யப்பட்ட பிள்ளைகளின் தந்தையாரான நவநீதன் பொலீசாரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மன அழுத்தத்துக்குள்ளான அப் பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. லண்டனில் உள்ள பெரும்பாலான தமிழ் குடும்பப் பெண்கள் வெளியிடங்களுக்குச் செல்லாமல் வீடுகளில் தனித்திருப்பதால் மன அழுத்தங்களுக்கு உள்ளாவதாக உளவளத்துணையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ-5)

# நடுக்கடலில் தவித்த நான்கு அகதிகள் ராமேஸ்வரம் மீனவர்களால் மீட்பு

(ராமேஸ்வரம்)

தனுஸ் கோடி அருகே நடுக்கடலில் இறக்கிவிடப்பட்ட இலங்கை அகதிகள் 2 நாட்களுக்கு பிறகு ராமேஸ்வரம் மீனவர்களால் மீட்கப்பட்டனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடப்பதால் அங்கிருந்து அப்பாவித்தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்த வண்ணம் உள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா கணேஷபுரத்தைச் சேர்ந்த் 4 பேர் தலை மன்னாரில் இருந்து ஒரு படகில் புறப்பட்டனர்.

படகோட்டி அவர்களை தனுஷ் கோடி அருகே 3 ஆவது திட்டியில் இறக்கி விட்டு இங்கிருந்து வேறொரு படகு மூலம் ராமேஸ்வரம் செல்லும்படி கூறி சென்று விட்டனர்.

நடுக் கடலில் இறக்கிவிட்ட 4 பேரும் அந்த வழியாக ஏதாவது படகு வருமா என்று எதிர்பார்த்திருந்தனர். யாரும் அவர்கள் அருகே வரவில்லை. இதனால் கரைக்கு வர முடியாமல் தவித்தனர் இரவு ஆக ஆக மணல் திட்டியில் தண்ணீர் புகுந்தது முழங்கால் அளவுக்கு தண்ணீரில் தவித்தபடி இருந்தனர். மறுநாள் சனிக்கிழமை அவர்களை மீட்க யாரும் வரவில்லை. பசியால் வாடினார்கள்.

இந்த நிலையில் அந்த வழியாக ராமேஸ்வரத்தை சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்கள் சென்றனர்.

அவர்கள் திட்டியில் தவித்த 4 பேரையும் மீட்டு முகுந்தராயர் சத்திரம் கடற்கரையில் கொண்டு வந்து விட்டனர். அங்கிருந்து தனுஷ் கோடி பொலிஸ் நிலையத்திற்கு வந்தனர். அங்கு பொலிசார் அவர்களுக்கு உணவு வாங்கி கொடுத்தனர். விசாரணைக்குப் பின்னர் அவர்கள் மண்டபம் அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

## இராசிபலன்

03.06.2008
(வைகாசி 21, செவ்வாய்க்கிழமை)
கார்த்திகை முற்பகல் 09.51மணிவரை
அமாவாசை பின்னிரவு 01.51 மணிவரை
இராகுகாலம் 02.52-04.22 மணிவரை
சுபநேரம்-10.22-11.52 மணிவரை
அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், கௌரவமான நிலை, நல்ல முயற்சி, போசனசுகம். |
| இடபம் | சோம்பல் நிலை, தனவிரயம், சுபசெலவு, காரிய இடையூறு. |
| மிதுனம் | தனதானிய சேர்க்கை, தெய்வ தரிசனம், சுபகாரியம். |
| கடகம் | பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்டசித்தி, நன்கொடை. |
| சிங்கம் | அதிகசெலவு, சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, நிலைமாற்றம். |
| கன்னி | அஜீரணக்கோளாறு, பொருள் விரயம், காரியதாமதம். |
| துலாம் | மனோதைரியம், அபூர்வசந்திப்பு, நல்ல தகவல், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி, பகைவர் நேசம். |
| தனுசு | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு. |
| மகரம் | மனச்சஞ்சலம், தனவிரயம், தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| கும்பம் | நற்கீர்த்தி, தேகநலன், அதிக பிரயாசை, காரிய அனுகூலம். |
| மீனம் | சோம்பல் நிலை, சுபகாரியச் செலவு, கௌரவக்குறைவு. |

வளவன்

# ராமர் பெயர்கூறி சேது சமுத்திரத் திட்டத்தை 'சேதுராம்' திட்டம் என பெயரிட்டு நிறைவேற்றலாம்

## கருணாநிதி வேண்டுகோள்

(சென்னை)

'ராமன் பெயர் கூறி சேது சமுத்திரத்திட்டத்தை தீர்த்துக்கட்டி விடாமல் சேதுராம் திட்டமொன்றே பெயரிட்டு திட்டத்தை நிறைவேற்றலாம்' என முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார். 'என் நடுங்கும் குரலுக்கு மதிப்பளித்து, திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது பிறந்த நாளை முன்னிட்டு கவிதை வடிவில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது, தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை,

தினந்தோறும் ஒரு சாதனையாக
செய்து முடிக்கிறோம்.
இனம்வாழ ஏற்ற வழியெல்லாம்
வகுக்கின்றோம்.
நிலம் தழைக்க நீரில்லாமல் பல
நேரம் வாடுகின்றோம்.
இயற்கையின் கருணை
இல்லாமல் போவதும்
இருப்போர் தர மறுப்பதையும்
உணர்ந்து
சேமித்துவைக்கும்செயற்கையின்
பயனைத்தமிழர்
சேமமுறவே திருப்புகின்றோம்.
ஆயினும் ஒரு கவலை
பெரியார். அண்ணா, காமராஜர்
கண்ட கனவொன்று இன்றும்
நிறைவேறாமல்
இதயம் துடிக்கிறது.
செந்தமிழ் நாட்டில்
செழிப்பு துள்ளவும், வாணிபம்
பெருகிவளங்கள் சிறக்கவும்
நமக்கு வேறு வழிஇல்லை
சேதுதிட்டம் ஒன்றே நமக்கு
சரித்திரக்கட்டாயம்
சூது நினைவால் அதைத்
தடுத்திட முனையாமல்
நாடு, மொழி வாழ உழைத்த
என் நடுங்கும் குரலுக்கு
மதிப்பளித்து
ராமன் பெயர் கூறி
திட்டத்தை தீர்த்துக்கட்டிவிடாமல்
என் பிறந்த நாள் செய்தியாக
வேண்டுகோள் விடுக்கின்றேன்
வேண்டுமானால்
சேதுராம் திட்டமென்றே பெயரிடுக..
வெறுப்பு விருப்பு கடந்த
நாடு வாழ்வதற்கும்
நலிவு தீர்வதற்கும்
நான் தெரிவிக்கும்
பிறந்த நாள் செய்தி இது. (அ-5)



அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை அதிபர் ம.ஜெயவரதராஜா 60ஆவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்வதை கௌரவிக்கு முகமாக நடைபெற்ற நிகழ்வில் மாணவன் ஒருவன் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# மழைநீர் தேங்குவதை தடுக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

மழை காலங்களில் பொது இடங்களில் நீர் தேங்குவதை தடுப்பதற்கு மக்களின் பங்களிப்பே முக்கியமானது என யாழ்.மாநகர சபை நீர் வழங்கல் வடிகாலமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

வீதியோரங்களில் உள்ள வாய்க்கால்களில் குப்பைகளைக் கொட்டுதல், தனியார் வீட்டிற்கான சிறிய பாலங்களை மண்ணால் நிரப்பி பாவித்தல் போன்ற செயற்பாடுகளினால் நீர் வழிந்தோடும் நிலை தடுக்கப்படுகிறது. மேலும் நீர் தேங்கும் நிலை பல நோய்களிற்கும் வழிவகுக்கிறது.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி மாநகர சபையினருக்கு ஒத்துழைப்பு வழங்கி சுகாதாரத்தைப் பேணுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (3,4)

# உயர்தர மாணவர் ஒன்று கூடலில் அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம்

(கரம்பொன்)

பாடசாலை காலத்தில் கிடைக்கும் கல்வியினை சமூகத்திலும் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்று கூடலில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அருட்தந்தை கலாநிதி மைக்கல் சவுந்தர நாயகம் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், உயர்தரத்தில் கல்வி கற்கின்ற ஒவ்வொரு மாணவனும் பாடசாலை காலத்தில் கிடைக்கின்ற கல்வியினை நழுவவிடாது கற்று அக்கல்வியினை சமூக மட்டங்களிலும் பயன்படுத்த வேண்டும் எனக் கூறினார்.

அதாவது இன்று எத்தனையோ இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் மதுபாவனை, புகைப்பிடித்தல் போன்ற தீய செயல்களில் ஈடுபடுகிறார்கள் இவர்களை மாற்ற படிக்கின்ற மாணவர்கள் சமூகத்தில் எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும். சமூகத்தில் முன் மாதிரியாக நடக்க வேண்டும், ஏனையோர் இம் மாணவர்களைப் பார்த்து திருந்த வேண்டும் என்றார்.

மேலும், ஒவ்வொருவரும் பேசும் வார்த்தைகள் மிகவும் நல்ல வார்த்தைகளாக அமைய வேண்டும். பேசிய வார்த்தைகளை மீட்க முடியாது எனவும் அறிவுரை கூறினார். (14)

# பாடசாலை அதிபர் வெற்றிடம்

யாழ்.கல்வி வலயத்துள் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ள கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை (தரம் II), முத்துத்தம்பி வித்தியாலயம் (தரம் I சி), நாவாந்துறை றோ.க:த.க.பாடசாலை (தரம் II) ஆகிய பாடசாலைக்ளுக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்சேவை, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2-1 தரத் தினைச் சேர்ந்தவர்கள் இப்பதவி வெற்றிடங் களுக்கு விண்ணப்பிக்கலாம். பொருத்தமான அதிபர்கள், ஆசிரியர்கள் உரிய விண்ணப்பப்படிவத் தினை யாழ்.வலய கல்வி அலுவலகத்தில் பெற்றுப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங் களை எதிர்வரும் 11ஆம் திக திக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு. அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (அ)

# வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் பட்டதாரி நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணி முதல் 11 மணிவரை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகப் பணிப்பாளர் அறிவித்தலுக்கிணங்க மேற்படி பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகளாகிய செல்வி எஸ்.கார்த்திகா, செல்வி எம்.சுநேத்ரா, ஜெ.சிவகுமார், ஜே.அவர்மா, ரி.உமாநிதி ஆகியோருக்கு இவ்விடயம் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது.

மேலதிக தகவல்களுக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலை மற்றும் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் அப்பகுதிப் பொலிஸ் திணைக்கள உயரதிகாரிகளினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

இவ் வைபவத்தில் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-19)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

தெல்லிப்பளை தென் மேற்கு - விழி சிட்டி அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

## தமிழ்த்தினப் போட்டிகள்

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிக்கான கோட்டமட்டத்திலான தெரிவுகளில், பருத்தித்துறை கோட்டமட்டத்துக்கான தெரிவு இம்மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மறுநாள் 14ஆம் திகதி சனிக்கிழமை வலய மட்டப் போட்டிகளும் யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் செல்வநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆனி மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ளது.

17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 18ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும், மாலை 4.30 மணிக்கு கொடியிறக்கமும், 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு கப்பல் திருவிழா என்பனவும் இடம்பெறும்.

# யாழ்ப்பாணக்கல்லூரி ஹொக்கி அணி யாழ்.மாவட்ட சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

யாழ் .மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் முதன் முறையாக நடைபெற்ற ஹொக்கி சுற்றுப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.



மேற்படி ஹொக்கி சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பாண கல்லூரிமை தானத்தில் நடை பெற்றது.

போட்டியில் யாழ் மத்திய கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஆகிய மூன்று அணிகள் மோதிக் கொண்டன.

இப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி அணியினரை வென்று வட்டுக் கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி அணி யாழ் மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (அ-5)

# உலக சுற்றாடல் தினம் தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு D சமூக விஞ்ஞானத் துறை யூன் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சர்வதேச ரீதியான சூழல் எழு வினாக்களும் விரைந்த உடன் பாட்டிற்கான தேவைப்பாடும் எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை விரிவுரை




யாளர் எஸ்.விஜயகுமார், "கால நிலை மாற்றங்களும் யாழ்.குடாநாடு எதிர் நோக்கும் பிரச்சினைகளும்" எனும் தலைப்பில் யாழ். சுற்றாடல் அதிகாரசபை உதவிப்பணிப்பாளர் திருமதி வி.சத்தியகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். (ஓ-6)

# அதிபர் வெற்றிடத்தை நிரப்புமாறு கோரிக்கை

வலிகாம கல்வி வலயத்திற்கு உட்பட்ட வட்டு.இந்து நவோதயாக் கல்லூரியின் அதிபர் ஓய்வு பெற்றுள்ளார். அதிபர் தெரிவிக்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்று முடிந்தும் இன்னும் அதிபரை தெரிவுசெய்யப்படவில்லை என இப்பாடசாலை பழைய மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


பொருத்தமான அதிபரை விரைவில் நியமிக்க உரிய நடவடிக்கையை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-17)

# சுயதொழில், மீள் குடியேற்றத்திற்கான கொடுப்பனவுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இனங்காணப்பட்டவர்களுக்கான இரண்டாம் கட்டக்கொடுப்பனவுகள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கையளிக்கப்பட்டன.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் இனங்காணப்பட்டுள்ளவர்களுக்கு சுயதொழில் கொடுப்பனவு களும், மீள் குடியேற்றத்திற்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டதுடன் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் இனங்காணப்பட்டவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. (அ)







பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் கணனிமயப்படுத்தப்பட்ட தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத் திறப்புவிழாவில் சுவாமி சித்ரூபானந்தா ஆசி வழங்குவதையும், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் கணனிமயப்படுத்தப்பட்ட தன்னியக்கப் பணப் பரிமாற்ற இயந்திர அறையை திறந்து வைப்பதையும், முகாமையாளர் எம்.பரமானந்தம், பருத்தித்துறை இலங்கை வங்கி உதவி முகாமையாளர் திருமதி சுமங்களா பிரபாகரன் ஆகியோர் உரையாற்றுவதையும், தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் எஸ்.இராஜமகேந்திரசிங்கம் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (பரு.நிருபர்)




ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்திய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியினர் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதை முதலாவது படத்திலும், ஐ.பி.எல் கிண்ணத்துடன் வோர்ன் அணி வீரர்களை இரண்டாவது படத்திலும், தொடரின் நாயகனான ஷேன் வோட்சன் விருதுடன் காணப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சந்தர்போல் நிதானம்; மேற்கிந்தியத்தீவுகள் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 255

(அன்ரிக்குவா)

சந்தர்போலின் நிதானமான துடுப்பாட்டத்



தால் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன் தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெற்றுக் களையிழந்து 255 ஓட்டங்களை எடுத்திருந்து. நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக தேநீர் இடைவேளைக்கு பின்பே ஆரம்பமானது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலைவகிக்க இரண்டாவது டெஸ்ட் கடந்த 30 ஆம் திகதி அன்ரிக் குவாவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெற்றுக்களையிழந்து 479 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் சைமண் ஹட்ரிச் 113 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் 110 ஓட்டங்களையும் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 65 ஓட்டங்களையும் மற்றும் பிரெட் லீ ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர் 3 விக்கெற்றுக் களையும் பவல், எட்வேட்ஸ், பிராவோ மற்றும் சமி ஆகியோர் தலா ஒரு விக்கெற்றை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெற்றுக்களையிழந்து 125 ஓட்டங்களை எடுத்திருந்தது.

3 ஆம் நாளான நேற்று முன்தினம் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாகவே மழை பெய்ய ஆரம்பித்தமையால் போட்டி தடைப்பட்டது. தொடர்ந்து நீடித்த மழையால் தேநீர் இடைவேளை வரை மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமாக தாமதமானது.

எனினும் பின்னர் மழைவிட ஆரம்பமாகி 36 ஓவர்களே வீசப்பட்ட நிலையில் மூன்றாம் நாள் ஆட்ட நிறைவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 4 விக்கெற்றுக்களை இழந்து 255 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் சந்தர்போல் 55 ஓட்டங்களையும் பிராவோ 29 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடி வருகின்றனர். முன்னதாக அணித்தலைவர் சர்வான் 65 ஓட்டங்களையும் மோட்டன் 53 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் மைக்கல் கிளார்க் 2 விக்கெற்றுக்களையும் மக்கில், ஜோன்ஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

நான்காம் நாள் ஆட்டம் நேற்று நடைபெறவிருந்தது. (5)

# ஐ.பி.எல் இறுதிப்போட்டி துளிகள்...

**கோப்பை எப்படி:** ஐ.பி.எல். இருபது-20 தொடருக்கான வெற்றிக் கோப்பை வைரம் உள்ளிட்ட விலை உயர்ந்த கற்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கோப்பையை தயாரிக்க 68.77 கரட் எடைகொண்ட 2554 வைரம், 218.55 கரட் எடை கொண்ட 4500 மஞ்சள் நிற மாணிக்கம், 986 கரட் மதிப்பிலான நீல மாணிக்க கற்கள், 248.70 கரட் எடை கொண்ட 8 மாணிக்க கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருக்கும் தங்கத்தின் எடை 691.5 கிராம்.

**தோனி சம்பளத்தைவிட பரிசுத் தொகை குறைவு:-** ஐ.பி.எல் தொடரில் கோப்பை வென்ற அணிக்கு ரூ.4.8 கோடி பரிசுத் தொகை அளிக்கப்பட்டது.

இது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் தோனி (ரூ.6கோடி) மற்றும் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக விளையாடிய சைமண்ட்ஸ் (ரூ.5.4 கோடி) ஆகியோரின் சம்பளத்தைவிட குறைவு. (5)

# இவ்வருடம் இரண்டாவது ஐ.பி.எல்.தொடர் இல்லை

(மும்பை)

ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெற் போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

சர்வதேச வீரர்களுடன் இளம் இந்திய வீரர்கள் விளையாடிய இத் தொடரை ரசிகர்கள் வெகுவாக ரசித்தனர். வீரர்கள் அதிரடியாக விளையாடி சிக்ஸர்கள், பவுண்டரியாய் அடித்து ரசிகர்களுக்கு விருந்து படைத்தனர்.

ரசிகர்கள் இத்தொடரை விரும்பியதாலும், இந்தப் போட்டி மூலம் கோடிக்கணக்கில் வருவாய் கிடைப்பதாலும் ஐ.பி.எல்.போட்டி இந்த வருடம் இரண்டாம் முறை நடத்தப்படும் என்று தகவல் வெளியாகி இருந்தது.

இந் நிலையில் இந்த ஆண்டு 2ஆவது ஐ.பி.எல்.போட்டி கிடையாது என்று ஐ.பி.எல். தலைமை அதிகாரி லலித் மோடி அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மீண்டும் ஐ.பி.எல். போட்டியை கிரிக்கெற் சபைத் தலைவர் சரத்பவார் மற்றும் பல வீரர்கள் விரும்பவில்லை 2011 ஆம் ஆண்டில் இருந்து இரண்டு ஐ.பி.எல். போட்டி நடைபெறும் என அவர் குறிப்பிட்டார். (5)

# காலிறுதிக்கு முன்னேறினார் இவானோவிச்

## நான்காவது சுற்றில் பெடரர்

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு செர்பியாவின் அனா இவானோவிச் தகுதி பெற்றுள்ளார். உலகின் முன்னணி வீரர் வீராங்கனைகள் பங்கேற்கும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பாரிசில் நடை பெற்று வருகிறது நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் நான்காவது சுற்று போட்டியில் தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் செர்பியாவின் அனா இவானோவிச், செக் குடியரசின் பெட்ரா செட்கோவ்ஸ்காவை சந்தித்தார்.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவனோவிச் 6:0,6:0 என எளிதாக வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

**ஜோன்கோவிச் அபாரம்:** மற்றொரு நான்காவது சுற்றுப் போட்டிகளில் சேர்பியாவின் ஜெலினா ஜோன்கோவிச், போலந்தின் அக்கினஸ்கா ராட்வன்ஸ்காவை எதிர்கொண்டார். இதில் ஜோன்கோவிச் 6:3, 7:6 என கடும் போராட்டத்துக்குப் பின் வென்றார். ஸ்பெயினின் கார்லா நவாரோ 6:3, 6:2 என இத்தாலியின் பிளாவியா பென்னட்டாவை வீழ்த்தினார்.

இவர் காலிறுதியில் ஜோன் கோவிச்சுடன் மோதுகிறார். பெண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றுப் போட்டியில் ரஷ்யாவின் எலினா டெமன்டிவா 6:0, 6:4என பெலாரசின் ஒல்கா கோவர்ட்சோவாவையும் செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா 7:5, 4:6, 6:2 என ஹங்கேரியின் ஆக்னஸ் சாவேயையும் வென்றனர்.

**பெடரர் வெற்றி:** ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றுப் போட்டியில் நம்பர்-1வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், குரோஷியாவின் மரியோ அன்சிக்கை எதிர்கொண்டார். இதில் சிறப்பாக விளையாடிய பெடரர் 6:3, 6:4,



6:2 என்ற நேர் செட்களில் வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற மூன்றாவது சுற்றுப் போட்டிகளில் குரோஷியாவின் இவா லூசிபிக் 4:6, 2:6, 6:3, 6:2, 6:4 என ரஷ்யாவின் நிக்காலோ டேவிடென்கோவையும், பிரான்சின் கெல் மான்பில்ஸ் 4:6, 7:5,4:6, 6:0, 6:2 என ஆஸ்திரியாவின் ஜர்கன் மெய்சரையும் வீழ்த்தி நான்காவது சுற்றுக்குள் நுழைந்தனர். (5)

# நூறு மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட் சாதனை

மின்னல் வேகத்தில் ஓடிய ஜமைக்காவின் உசைன் போல்ட் 100 மீற்றர் தூரத்தை 9.72 வினாடிகளில் கடந்து புதிய உலக சாதனை படைத்தார்.



இவர் அசபா பாவெலின் (9.74வினாடி) சாதனையைத் தகர்த்தார் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சர்வதேச கிராண்ட் பிரிக்ஸ் தடகளப் போட்டி நடந்தது. நேற்று முன்தினம் நடந்த 100மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்காவின் உசைன் போல்ட் அபாரமாக ஓடினார். கடந்த முறை உலக தடகள சம்பியன்ஷிப் தொடரில் 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாவது இடம் பிடித்து வெள்ளி வென்ற இவர் இம்முறை 100 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம் பெற்று அசத்தினார்.

இத் தூரத்தை 9.72 வினாடிகளில் கடந்து புதிய சாதனை படைத்தார். முன்னதாக கடந்தாண்டு செப்ரம்பரில் இத்தாலியில் நடந்த தடகளப் போட்டியில் ஜமைக்காவின் அசபா பாவெல் 9.74 வினாடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது தற்போது இவரது சாதனையை மற்றுமொரு ஜமைக்கா வீரரே முறியடித்துள்ளார். இப்போட்டியில் இரண்டாவது இடத்தை அமெரிக்காவின் டைசன்கே மற்றும் மூன்றாவது இடத்தை டார்விஸ் பட்டேன் பிடித்தனர்.

தனது சாதனை குறித்து போல்ட் கூறுகையில் :- சாதனை படைத்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. பீஜிங் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதை விட பெரிதாக நினைக்கிறேன். சாதனை படைப்பேன் என சிறிதளவும் எதிர்பார்க்கவில்லை. என்றார். (5)

# அழகுக், கவலைகள்-இனி வேண்டாம்

Dr. ஹேமா சதீஷ்
தேவதாஸ் பல்நோக்கு மருத்துவமனை
மதுரை போன்: 00914522529504
E.mail:drhemasathish@yahoo.co.in

ஒரு தோல் நோய் மருந்துவரை எப்போது பார்க்கச் செல்கிறோம்? தோல் அரிப்பு, தடிப்பு, படை, தேமல், வெண் தோல், பாலுண்ணிகள், மரு, மங்கு போன்று ஏதேனும் ஒரு தோல் நோய் வரும்போது தான் இவர்கள் பொதுத் தோல் நோய் மருத்துவர்கள் (General Dermatologist) என்று அழைக்கப்படுகிறார்கள் ஆனால் தமிழகத்தின் மதுரை நகரிலுள்ள தேவதாஸ் பல்நோக்கு மருத்துவமனையின் மருத்துவர் ஹேமா சதீஷ் தன்னை (அழகூட்டும் தோல் மருத்துவர்) (Cosntetic Dermatologist) என்று கூறுகிறார்.

தோல் மருத்துவத்தின் வளர்ந்து வரும் ஒரு புதிய கிளை மருந்துவம் இது என்கிறார் டாக்டர் ஹேமா சதீஷ்.

குழந்தைகளை அவர்களது பெற்றோர்கள் அழகுபடுத்திப் பார்க்கிறார்கள் இள வயதில் தங்களைத் தாங்களே அழகாக்கிக் கொள்வதில் இருபால் இளைஞர்களும் யுவதிகளும் அதிக அக்கறை கொள்கிறார்கள்.

திருமணச் சந்தை இன்று அழகு மருத்துவத்துக்கு ஒரு புதிய தேவையை உருவாக்கி உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. மத்திம வயதில் உள்ளவர்கள் கூட தங்களை லட்சணமானவர்களாக வைத்துக் கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டி வருவது உண்மை.

ஒரு நிமிடம் நிற்க! அழகு நிலையம் நடத்தி வரும் அழகுக்கலை நிபுணர்களின் பணியினை இவர்களது மருத்துவப் பணியோடு நாம் குழப்பி விடக் கூடாது. இரண்டுக்குமான கல்வி முறையும் பயிற்சிகளும் வேறு வேறானவை. அழகுக்கலை நிபுணர்கள் இருப்பதைச் செம்மைப்படுத்தி உடல் அழகுக்குப் பொலிவு கூட்டுகிறார்கள். பத்துப் பேருக்கு மத்தியில் பளிச்செனத் தோற்றமளிக்கச் செய்து விடுகிறார்கள் ஆனால் மருத்துவர்களின் பணியோ வேறு விதமானது. இவர்கள் கல்வி கற்கும் காலம் நீண்டது. பயிற்சிக் காலமும் கடுமையானது. பாதிப்பின் தன்மையை அளவிட்டு உடல் உள்ளுக்குள் குறைகளை ஆராய்ந்து பரம்பரைத் தன்மையைக் கணக்கில் கொண்டு தீர்வு சொல்கிறார்கள். பாதிக்கப்பட்ட, சேதமான உடலின் அழகினை உயிர்ப்பிக்கும் மருத்துவப் பணி இது.

மருத்துவர் ஹேமா சதீஷ் அருமையான உதாரணம் தருகிறார். சிலருக்கு உதடுகள் குவிந்திருக்கும் பகுதி சற்றே கீழ் நோக்கி கவிழ்ந்திருக்கும். உதடுகள் கீழ்நோக்கி வளைந்திருந்தால் அவர்கள் கவலை மிக்க தோற்றத்தைக் கொண்டவர்களாகக் காட்டிவிடும். இது ஒரு சிறு சிகிச்சை மூலம் இவர்களது உதடுகளின் குவி பகுதி சற்று மேல் நோக்கி இருக்குமாறு செய்து விடுகின்றனர். அட! என்ன ஆச்சர்யம்! முகம் மலர்ந்து சிரிக்கும் தோற்றத்தைக் கொண்டு வந்து விட்டனரே!

இதைப்போல சிலருக்கு மேல் உதடுகள் சற்றே சிறியதாக இருக்கும். இவர்கள் சிரிக்கும்போது ஈறுகள் எல்லாம் தெரியும். இவர்கள் முக அமைப்பை சற்றே சரி செய்யவேண்டும். மேல் உதடுகளின் தசைகளைத் தளர்த்தி, அவர்களையும் மென்மையாக சிரிக்க வைத்துவிட முடியும் என்கிறார் மருத்துவர். ஆச்சரியமான தகவல் என்னவென்றால் இதில் அறுவைச் சிகிச்சை எதுவும் இல்லை என்பதுதான். அதனால் உதட்டில் தழும்பு எதுவும் வரப்போவதுமில்லை. உதடுகள் மிக மெலிந்து காணப்படுபவர்கள் முகம் எடுப்பாக தெரிவதில்லை. பிறவியிலேயே சிலருக்கு உதடுகளின் அமைப்பு சற்று மாறுபட்டு அமைந்திருக்கக் கூடும். சிலருக்கு விபத்துக்களில் இவ்விதம் நேரலாம். இத்தகைய குறைபாட்டை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தி விட முடியும் என்கிறார் அவர். தான் சந்தித்த வேறுவிதமான நோயாளி ஒருவர் பற்றிக் கூறுகிறார் மருத்துவர் ஹேமா. நாற்பது வயதைத்தாண்டி பேரன் பேர்த்தி வந்து விட்டநிலையிலும் பொது இடங்களில் நிமிர்ந்து நிற்க முடியாமல் தன்நம்பிக்கைஇழந்து தாழ்வு மனப்பான்மையுடன் வாழ்வின் பெரும் பகுதியை கடந்து விட்டார் ஒரு பெண்மணி. அவருக்கு இருந்த பிரச்சினை முகத்தில் தேவையற்ற இடங்களில் முடி வளர்ந்ததுதான். அவரது பிரச்சினை தீர்க்கப்பட்டது. இப்போது அவரால் எல்லோரையும் பேர்ல சாதாரணமாக நடமாட முடிகிறது. பெண்கள் பலருக்கு தேவையற்ற முடிவளர்ந்து தர்மசங்கடம் தருகிறது. இந்நிலையில் அவற்றை லேசர் சிகிச்சை மூலம் நீக்கி விட முடியும் என்று கூறுகிறார் மருத்துவர். மீண்டும் மீண்டும் வரவேண்டியதிருக்குமா? என்ற சந்தேகத்தை அவரிடம் கேட்டோம். சிலமுறை வர வேண்டியதிருக்கும் என்றார் அவர். ஆனால் அவர் உறுதியானபலன் இருக்கும் என்றார். வேறுவிதமான பிரச்சினை ஒன்று பலரையும் பல வேளைகளில் தர்மசங்கடத்தில் ஆழ்த்தி விடுகிறது. இளம் பிராயத்தில் பருக்களால் வந்த வடு பேறுகாலம் முடிந்தவுடன் இளம் தாய்மார்களை பாதிக்கும் வயிற்றுச் சுருக்கம் போன்றவை தான் இப்பிரச்சினை மேலும் விபரிதமான ஒரு பிரச்சினை ஒன்றையும் மருத்துவர் விபரித்தார்.

தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்துடன் ஊசி, பிளேடு போன்றவற்றால் உடலில் கீறிக் கொண்டவர்கள் பலவேளைகளில் காப்பாற்றப் பட்டு விடுவார்கள். ஆனால் அவர்கள் உடம்பில் செய்து கொண்ட காயங்களின் தழும்புகள் செய்த தவறின் நினைவுச் சின்னங்களாய் நின்று விடும். வாழ்நாள் முழுவதும் மன உறுத்தலை தந்து கொண்டே இருக்கும். இப்போதெல்லாம் இவற்றை எளிதாக நீக்கிவிடும் சிகிச்சை முறைகள் வந்துவிட்டன. இவர்களுக்கும் தழும்புகளை நீக்கி குற்ற உணர்வில் இருந்து விடுதலை அளிக்கிறோம் என்கிறார் மருத்துவர்.

தழும்புகள் சாதாரணமாகப் பார்க்கும்போது தெரியாத வண்ணம் செய்து விடுவோம் என்றார். கூர்ந்து நோக்கித் தேடினால் மட்டுமே தெரியும்.

அதுபோலவே வெண்தோல் என்ற ஒரு கொடிய நோய் உண்டு. பார்ப்பவர்கள் மனதில், எதிரில் நிற்பவர் தொழுநோயாளியோ என்ற அச்சம் உண்டாகும்.

இந்த வெண் தோல் நோயையும் அறுவைச் சிகிச்சை மூலம் சாதாரண தோல்போல தோற்றமளிக்கும் தன்மைக்கு மாற்றி விடுகின்றனர்.

காதல் வயப்பட்டும் அரசியல், ஆன்மிக வெறியிலும் உடம்பில் பல இடங்களில் பச்சை குத்திக் கொண்ட சிலர் காலமாற்றத்தினால், பழையனவற்றை மறக்க முடியாமலும், பச்சை குத்தியதை மறைக்க முடியாமலும் அவதிப்படுவர். அவர்களுக்கும் சாரீர, மன உபாதைகளிலிருந்து விடுதலை அளிக்க முடியும் என்ற நற்செய்தியை தெரிவிக்கின்றார் மருத்துவர் ஹேமா.

தேவையற்ற கொழுப்பு உடம்பின் பல பகுதிகளில் சேர்ந்து விகாரமான தோற்றம் உருவாகிவிட காரணமாகிவிடுவதுண்டு. இவர்கள் பொது இடங்களில் கேலிப் பேச்சுக்கு ஆளாக நேர்வதுண்டு. இதனைச் சரி செய்ய அவர்கள் பல உடற் பயிற்சிகளும் நடைப்பயிற்சிகளும் மேற்கொள்வர். சாப்பிடாமல் இருந்து உடலை பலவீனப்படுத்திக் கொள்வர்.

உடல் இளைக்க அவர்கள் செய்யாத முயற்சிகளோ தேடாத வழிகளோ இருக்காது எனலாம். இவர்களுக்கு வரப்பிரசாதமாக வந்திருப்பது லிப்போசக்ஷன் எனப்படும் சிகிச்சை முறை.

நடுவயதினைக் கடக்கும் ஆண்கள் பலரின் தீராத பிரச்சினை தலையில் முடி உதிர்ந்து வழுக்கை விழுதல், வயதான தோற்றத்தை அழித்து கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகும் இவர்களுக்கு முடி மாற்ற ஆறுவைச் சிகிச்சை (Hair transplant) தீர்வாக சொல்லப்படுகிறது. நட்ட இடத்தில் மீண்டும் முடி வளர்கிறது. ஆனால் இன்னமும் இது எளிதாக செய்து முடிக்கக் கூடிய சிகிச்சை முறை இல்லை என்று மருத்துவர் எச்சரிக்கை செய்கிறார்.

முகப்பொலிவு கூட்டும் சிகிச்சையில் சுருக்கங்களை நீக்குதல் முக்கியமானதொரு சிகிச்சையாகும். இறக்குமதி செய்யப்பட்ட போட்டோக்ஸ் மற்றும் ரெஸ்டிலேன் ஊசி மருந்து கொண்டு வலியின்றி சுருக்கங்களை நீக்கி விடுகின்றனர்.

முகத்தசைகள் தளர்ந்து வயதான தோற்றம் கொடுக்கும்போது இறக்குமதி செய்யப்பட்ட நவீன மருத்துவ இயந்திரங்களின் உதவியுடன் முகத் தசைகள் வலுவூட்டப்பட்டு முகப்பொலிவு கூட்டப் படுகிறது. அழகாகத் தோற்றமளிப்பதில் ஆண் பெண் இருபாலருக்கும் உள்ள பிரச்சினைகள் பலவற்றுக்கு மருத்துவ ரீதியாக தீர்வுவந்துவிட்டதாகவே தெரிகிறது.

ஆனால் இது குறித்த விழிப்புணர்வு மக்களிடையே இல்லை என்பதும் உண்மை என்கிறார் அவர். அதிக செலவு பிடிக்குமோ என்ற அச்சத்தினாலும் இத் துறையில் நிபுணர்கள் பரவலாக இல்லாததும் காரணமாகும்.

ஆனால் இத்துறையின் அபார வளர்ச்சி குறித்து பொது மருத்துவர்கள் உணர்ந்திருப்பதால் நோயாளியின் பிரச்சினைகளை தனிப்பட்ட முறையில் அறிந்த அவர்கள் இப்போது இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள்.

அழகுக் குறைபாடுகளால் அவதிப்படுவோர் இப்போது செய்யவேண்டியதெல்லாம், தயக்கங்களை ஒதுக்கி வைத்து விட்டு மனம் விட்டு பேச வேண்டியதுதான்.

அழகூட்டும் தோல் மருத்துவர்களிடமோ அல்லது அவர்களது குடும்ப வைத்தியரிடமோ பிரச்சினைகள் குறித்து பேசி அதற்கான தீர்வு என்ன, என்ன செலவு பிடிக்கும் எத்தனை நாட்கள் மருத்துவமனை செல்ல வேண்டியிருக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்று பேசவேண்டியதுதான்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் அழகுக் கவலைகள் அர்த்தமற்றவை என்கிறார் மருத்துவர் ஹேமா சதீஸ்.

நன்றி வீரகேசரி

# நம்பி வரும் அடியார்க்கு நலம் தரும் நயினை நாகபூஷணி

அகில அண்டங்களையும் அதில் நிலை பெற்றுள்ள சகல பொருட்களையும்; சரம் அசரம் எனும் உயிர் வகைகளையும் படைத்தவள் அன்னை ஆதி பராசக்தி . சாரசரங்கள் உய்யும்பொருட்டு 32 அறங்களையும் உதவியவளும் அவளே.

அவள் தயவில்லையே பிரம்மா, விஸ்ணு, உரித்திரன் ஆகிய மும்மூர்த்திகளின் தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல் போன்ற முத்தொழில்களும் ஈடேற்ற முடியதாகிவிடும். தன்னை நினைந்து உருகும் அன்பர்களின் துன்ப துயரங்களை எல்லாம் தன் அருட் புலனால் கழிவித்துடைத்து நல்லன எல்லாம் தந்தருள்பவள்.

உடல்தளர்ந்து கூனி ; உரோமம்வெளுத்து ஐம்புலன்களின் உணர்வுகள் அனைத்தும் அடங்கி , அறிவிழந்து, மரணமாகின்ற மூப்பு, பிணி, சாக்காடு எனப்படும் கெரடிய துன்பங்களுக்கெல்லாம் காரணமான பிறவிப்பிணியில் இருந்து தன்னைச் சரணடையும் ஆன்மாக்களை மீட்டெடுக்கிறாள். ஈஸ்வரியை அர்ச்சித்து அருள் பெற்ற மும்மூர்த்திகள் மாயா முனிவர்கள், தேவர்கள் மனிதர்களுடன் அவளைப் பூஜித்த நாக பாம்பொன்று பெரும் பேறு பெற்றதாக செவி வழியாக கேட்டும் ஆலயப் புராதன வரலாற்றொன்றின் மூலம் அறிய முடிகிறது.அதன் காரணமா கவே புராதன நாக ஈஸ்ரி வழிபாடுகளில் சங்கமத்தில் நாகேஸ் வரி என திருநாமத்தினைப்பெற்ற நயினை அம்பிகைக்கு நாக பூஷணி என திரு நாமம் வழங்கலாயிற்று என நம்பப் படுகிறது.

மணித்தீவின் ''புவனேஸ்வரிபீடம்'' நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகை ஆலயமே என்பதுவும் ஆன்றோர் கருத்து. ஆகம விதி முறைகளுக்கு முரணற்ற விதத்தில் வானளாவ உயர்ந்து நிற்கும் பண்டிகைகள், கோபுரங்கள் மற்றும் பரிவார மூர்த்திகளின் ஆலயங்களுடன் பாண்டிய கட்டடக் கலை அமைப்பை ஒத்த அமைப்புடன் காட்சி தருகிறது அம்பிகையின் ஆலயம்.

10 ஆயிரம் வருடங்கள் முற்பட்ட ஆலயத்தின் பூர்வீக வரலாற்றிற்கு ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் உள்ள மூல விக்கிரகமே வலுவான சான்றாகவுள்ளது.

நவீன முறைகளில் அதனை ஆய்வு செய்த சிற்ப சாஸ்திர வல்லுநர்களும் தொல் பொருள் ஆய்வாளர்களும் ஸ்தபதிகளும் அதன் தொன்மையினையும் சிறப்பினையும் தமது ஆய்வுகளின் முடிவாக வெளிப் படுத்தியுள்ளனர்.

ஆலயத்தில் தற்போதுள்ள உற்சவ நாயகிவிக்கிரகம் அண்ணளவாக 500 வருடங்கள் பழமையானது. கலை அம்சத்தில் மிகச் சிறப் புடையதும் தெய்வீக அழகில் ஒப்பு வமை அற்றதுமாக திகழ்கிறது. அவ்விக்கிரகம் அழகிய கூந்தலும், கருணை சுரந்து தன் அடியாரைப் பாரிக்கும் இரு கடைவிழிகளும், விம்மிப்புடைத்த இரு தனங்களும் நயன் பார்வைக்கு புலப்படாத சிற்றிடையும், உள்ளன் போடு வழிபடும்.

அன்பர்கள் தேடுகின்ற செங்கமல பொற்பாதமும் பொருந்தியவளாக நாகபூஷணி காட்சி தருகிறாள்.

சின்னம் சிறிய இடையிலே சாத்தப்பட்ட செம்பட்டாடையும், பென்னம் பெரிய பட்ட தனங்களின் மேலே தவள்கின்ற பொன் முத் தாரங்களும் அன்றலர்ந்த மலர்களினாலே தொகுக்கப்பட்ட மலர்த் தொடைகளும் அழகுக்கே அழகு செய்ய.

அனல் கக்கும் செங் கண்களையுடைய மாற்றுக்குறையாத பசும் பொன்னினால் செய்யப் பட்டட நாக பட நீழலில்.

தங்கத்தினா லான ஒளி பொருந்திய சந்திர

வட்டக் குடையின் கீழ் அமர்ந்து அன்னை வீதியுலா வர எழுந்தருளும்

காட்சி அற்புதமானது எம்மை எல்லாம் அதிசயமான

தெய்வ சந்தியத்துடன் கலக்கச் செய்வது

அன்னையின் அளப்பெரிய திருவருள்

எம்மில் படிவதால்;

சுய நல நோக்குடன் அகம் பாவத்துடன் இருக்கும் உடல் நடுங்குகிறது



உள்ளம் வெதும்பிக் கண்களில் நீர் ததும்புகிறது

கரங்கள் சிரசிற் குவிய 'அம்மா அம்மாடு என அழைக்கிறோம்

தாயே நாகபூஷணியே!

நீ பேசாதவர்களை எல்லாம் பேசவைப்பாய் பார்க்காதவர்களை எல்லாம் பார்க்க வைப்பாய்

கேளாதவர்களை எல்லாம் கேட்க வைப்பாய்

நடவாதவரர்களை எல்லாம் நடக்க வைப்பாய்

தீராத நோய்களை எல்லாம் தீர்த்து வைப்பாய்.

'நம்பினார் கெடுவதில்லை'' என வேதங்கள் கூறுகின்றன.

தாயே! நாங்கள் உன்னை நம்புகின்றோம்

உனது குழந்தைகளாகிய நாங்கள் உன்னை

அன்றி வேறுயாரையம்மா நம்புவது

'வந்தனைகள் உன்னடிக்கே ஆக்கி நிற்கிறோம்'

சம்பந்தன் அழுதபோது பால் கொடுத்த நீ

அபிராமிப் பட்டருக்கு அருள் கொடுத்த நீ

சங்கரறார்க்கும் ரமணருக்கும் மெய் அறிவு தந்த நீ

'வரம் தந்து எமைக்காத்து வாழவைப் பாய்!'

நீ திருவீதி வந்து இந்த நாட்டிலே சாந்தியையும் சமாதானத்தையும் தருவாய்.

நயினை மு.நா. நடராசா

# இளவரசர் வில்லியம்ஸ்ஸின் திருமண அறிவிப்பு நாட்டு மக்களுக்கு முன்னுதாரணமாக அமையாது

# மகாராணி எலிசபெத் கவலை

(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் சார்ள்சின் மூத்த மகன் வில்லியம்ஸ் கதே மி டில்டன் என்ற பெண்ணை காதலித்து வருகிறார். அந்த பெண்ணுக்கு வேலை கிடைக்கவில்லை. இதனால் ராணி எலிசபெத் கவலைப் படுகிறார். வேலை கிடைப்பதற்கு முன்பு திருமணம் செய்து கொள்வது பற்றி இளவரசர் வில்லியம்ஸ் அறிவிப்பதை ராணி விரும்பவில்லை. அது தன் பேரனின் புகழுக்கு பங்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் கருதுகிறார்.

இங்கிலாந்து இளவரசர் வில்லியம் சென்ட ஆன்ட்ரூ பல்கலைக்கழகத்தில் படித்த போதுதான் கதேமிட்ல்டனை சந்தித்தார் கதேயும் அங்கு தான் படித்தார். இருவரும் அடிக்கடி சந்தித்து பேச அது காதலாக மாறியது. காதலித்த கதேயையே அவர் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டு இருக்கிறார். படித்து முடித்ததும் அவர் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

வில்லியம்ஸ் தன் காதலை ராணி எலிசபெத்திடம் கூறி அவருக்கு தன் காதலியையும் அறிமுகப்படுத்தி வைத்தார். கதேயை திரு மணம் செய்து கொள்ள அரச குடும்பத்தினர் சம்மதம் தெரிவித்து விட்டனர்.

அவர் தங்கள் திருமணம் பற்றி விரைவில் அறிவிக்க திட்டமிட்டு இருக்கிறார். இது பற்றிய தகவல் கிடைத்ததும் இங்கிலாந்து ராணி எலிசபெத் கவலை கொண்டார்.

வில்லியம்ஸ் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண் எந்த வேலையிலும் இல்லை சொந்தக் காலில் நிற்காத ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டால் அது தன் நாட்டு மக்களுக்கு சரியான முன் உதாரணமாக இருக்காது என்று அவர் நினைக்கிறார்.

சொந்தகாலில் நிற்காத பெண்ணை திருமணம் செய்து கொண்டால் அது தன் பேரனின் நற்பெயருக்கும் புகழுக்கும் கேடு விளைவிக்கும் என்று அவர் கருதுகிறார்.


இதனால் கதே நல்ல வேலையையோ அல்லது ஒரு தொழிலையோ தேடிக்கொண்ட பிறகு திருமணம் பற்றி அறிவித்தால் நல்லது என்று ராணி கருதுகிறார். அவரது இந்த கவலைக்கு கதே பிரச்சினை என்று அரண்மனை வட்டாரம் பெயர் சூட்டி உள்ளது.

ராணி தன் கவலையை தன் நம்பிக்கைக்குரிய நண்பர்கள் சிலரிடம் பகிர்ந்து கொண்டு, இதை எப்படி சமாளிப்பது என்பது பற்றி ஆலோசனை நடத்தினார்.

வில்லியம்ஸ்சின் திரு மண திட்டத்தை பற்றி அறிவிக்கும் போது கதே வேலையில் இல்லாமல் இருந்தால் என்ன பின்விளைவுகள் ஏற்படும் என்பது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார். (அ-5)

## அமெரிக்க அதிபர் வேட்பாளர் தெரிவு பியூடோரிக்கோவில் ஹிலாரி வெற்றி

அமெரிக்க அதிபர் பதவிக்கான ஜன நாயக கட்சியின் வேட்பாளர் யார் என்பதை நிர்ணயிக்க நடைபெற்று வரும் வாக்குப் பதிவில் பியூர் டோரிகோவில் பாரக் ஒபாமாவை விட அதிக



வாக்குகள் பெற்று ஹிலாரி கிளின்டன் வெற்றி பெற்றுள்ளார். எனினும் அதிபர் பதவிக்கான வேட்பாளர் போட்டியில் கூடுதல் பிரதிநிதிகளின் ஆதரவு டன் பராக் ஒபாமாவே தொடர்ந்து முன்னிலை பெற்றுள்ளார்.

பியூர்டோ ரிகோவில் நடைபெற்ற வாக்குப் பதிவில் ஹிலாரிக்கு 68சதவிகித ஆதரவு கிடைத்துள்ளது. ஒபாமாவுக்கு 32சதவிகித ஆதரவு மட்டுமே கிட்டியது. ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளராக தேர்வு பெற தேவைப்படும் 2118வாக்குகளில் 48வாக்குகள் மட்டுமே ஒபாமா குறை வாக பெற்றள்ளார். ஹிலா ரிக்கு 1915வாக்குகள் மட்டுமே உள்ளன. (அ-5)

## அடுத்தடுத்த வீட்டில் 72 ஆண்டுகள் பிரிட்டனில் இரு பெண்கள் சாதனை

(லண்டன்)

பிரிட்டனைச் சேர்ந்த இரு பெண்கள் 72 ஆண்டுகளாக அடுத்தடுத்த வீட்டில் குடியிருந்து சாதனை படைத்துள்ளனர். பிரிட்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் நகரில் தான் இந்த அதிசயம் நடந்துள்ளது.



மேரி தில்லே என்ற பெண் 1935 இல் கேம்பிரிட்ஜில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புக்கு குடி வந்தார். இந்த குடியிருப்பில் நூறுக்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. மேரி குடியேறிய சில மாதங்கள் கழித்து அவரது பக்கத்து வீட்டுக்கு ஈவிரின் என்ற பெண் தனது பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் குடி வந்தார்.

தற்போது மேரிக்கு 94வயதாகி விட்டது. பக்கத்து வீட்டுக்கு குடி வந்த ஈவ்விலினுக்கு 72வயது. இன்னும் இருவரும் அடுத்தடுத்த வீடுகளிலேயே வசித்து வருகின்றனர். இவரும் 72 ஆண்டுகளாக இப்படி தொடர்ந்து வசிப்பது பிரிட்டனில் சாதனையாக கருதப்படுகிறது. இந்த சாதனை கின்னஸ் புத்தகத்திற்கு பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஈவிலின் கூறுகையில், கடந்த 1999இல் என் பெற்றோர் இறந்துவிட்டனர். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் மேரியின் கணவர் இறந்து விட்டார். இதற்கு பின் இருவரும் தனிமையாக இருப்பதாக உணர்ந்தோம். மனம் விட்டு பேசினோம். தற்போது நெருக்கமாகி விட்டோம் எங்கள் மனக் கவலைகளை பகிர்ந்து கொள்வோம்.

இந்த 72ஆண்டுகளில் பல மாற்றங் களைப் பார்த்து விட்டோம் . ஆனால் எங்கள் மனநிலையில் எந்த மாற்றமும் இல்லை என்று மேரி கூறுகையில், ஈல்லின் எனக்கு மிகச் சிறந்த துணை தினமும் காலையில் சந்தித்து பல்வேறு விஷயங்களை அலசுவோம். பின் ஒன்றாக தேநீர் அருந்துவோம். ஒன்றாக அமர்ந்து டிவி பார்ப்போம். இதுவரை எங்கள் இருவருக்கும் சண்டை வந்ததே இல்லை. மீதியுள்ள காலத்தையும் இப்படியே கழித்து விடுவோம். வாழ்க்கை சந்தோஷமாக உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சண்டை போட வேண்டும் என்பது கட்டாயமா என்ன என்றார். (அ-5)

## கற்றல் குறைபாட்டைச் சரி செய்ய கொம்பியூட்டர் கை கொடுக்கும்?

### நரம்பியல் நிபுணர்கள் ஆய்வு

(வோஷிங்டன்)

மண்டையில்என்ன களிமண்ணா இருக்கு என்று இனி குழந்தைகளைத் திட்டாதீர்கள். மண்டையில் என்ன இருக்கிறது. குறைவாக இருப்பதை சரி செய்ய என்ன வழி? என்பதையெல்லாம் சொல்ல கொம்யூட்டர் தொழில் நுட்பம் கைகொடுக்கப்போகிறது. அமெரிக்காவில் உள்ள பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் நரம்பியல் ஆராய்ச்சியாளர்கள் நிபுணர் டாம் மிட்செல் தலைமையில் ஆராட்சி செய்தனர். மனித மூளையைகொம்யூட்ர்துல்லியமாக ஆராய்ந்து சொல்ல முடியுமா படிப்பதில், அறிவுக் கூர்மையில் உள்ள குறைபாட்டை நீக்க முடியுமா? என்பது தான் இவர்களின் ஆராய்ச்சி.

இந்த ஆய்வில் இப்போது முதல் கட்ட வெற்றியைப்பெற்றுள்ளனர். மூளையில் எடுக்கப்படும் ஸ்கான் மூலம் மனித மூளையை கொம்யூட்டர் மூலம் ஆராயலாம் என்பது தான் அது. குழந்தைகளுக்கு லேர்னிங் டிஸ் ஓடர் என்று சொல்லப்படும்அறிவு மந்த பாதிப்பை சரி செய்ய இது உதவுமா என்று இப்போது ஆராய்து வருகின்றனர். இது குறித்து நிபுணர்கள் கூறியதாவது, மூளையில் உள்ள தகவல் சேமிக்கும் 'செல்கள்' தான் அறிவுக் கூர்மைக்கு முக்கியமானவை அவற்றில் குறைபாடு இருந்தால் அறிவுக் கூர்மை பாதிக்கப்படுகிறது. இதை மூளையில் உள்ள செல்களை சீரமைப்பதன் மூலம் சரிசெய்ய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அது தொடர்பாகத்தான் நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

குழந்தைகளில் சிலர் படிப்பில் அருமையாக சாதிப்பர். சிலர் மந்தமாக இருப்பர். மந்தமாக இருப்பவர்கள்சாதுரியம் இல்லாதவர்கள் என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு மூளையில் உள்ள தகவல்செல்களில் உள்ள குறை பாடு தான் காரணம் என்று எண்ணுகிறோம். மந்த புத்தி உள்ள குழந்தைகளின் மூளை ஸ்கானை கொம்யூட்டரில் ஆராய்ந்து குறைபாட்டைக் கண்டு பிடித்து அதைத் தீர்க்க வழி களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

அப்படிக் கண்டு பிடித்து விட்டால் லேர்னிங் டிஸ்ஓடர் கோளாறை எளிதில் நீக்கி விடலாம் நன்றாகப் படிக்கும் குழந்தைகளின் மூளை ஸ்கான் கொம்யூட்ரால் ஆராய்ந்து மந்த புத்தி குழந்தைகளின் மூளை ஸ்கானுடன் ஒப்பிட்டு ஆராயவும் உள்ளோம். இதன் மூலம் மூளையில் உள்ள தகவல்செல்களை மாற்றியமைக்க வழி கிடைக்கும் இவ்வாறு நிபுணர்கள் கூறினர். (அ-5)

## உலக தரிசனம்

## யோகா செய்பவர்களை தீய ஆவி அடிக்கும் பிரிட்டன் பாதிரியார் கடும் எச்சரிக்கை

(நியூயோர்க்)

யோகா செய்யாதீர்கள் அது தீமையை விளைவிக்கும். எச்சரிக்கையை மீறி நீங்கள் தொடர்ந்து யோகா செய்தால் தீய ஆவி உங் களை அடிக்கும். பிரிட்டனில் உள்ள73 வயது கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார் இப்படி ஒரு சாபத்தை விட்டுள்ளார் . பிரிட்டனில் 'பேயோட்டுதல்' என்று ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. எந்த செயலைச் செய்தால் தீய ஆவியிடம் சிக்கி விடுவர் தீய ஆவிகளிடமிருந்து எப்படிக் காத்துக் கொள்வது என்பது பற்றி இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள் ளது.

'வெஸ்ட் மினிஸ்டர் ஆர்ச் டயோசிஸ்' ஆக இருந்தவர் 73 வயது பாதிரியார். ஜெரிமிடேவிஸ். புத்தகத்தில் இவர் தான் பல கருத்துக்களை சொல்லிய்ுள்ளார் பாதிரியார்டேவிஸ் கூறியிருப்பதாவது, கத்தோலிக்க கிறிஸ்தவத்துக்கு மாறாக பல செயல்களில் சிலர் ஈடு பட்டு வருகின்றனர்.

கிழக்கு நாடுகளில் இருந்து வந்துள்ள யோகா பயிற்சியும்அதில் ஒன்று. இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவோரை தீய ஆவி சும்மா விடாது. அவர்களுக்கு பெரும் பாதிப்பு வரும் . போதை மருந்து சாப்பிடுவது தவறான இசை கேட்பது பாலியல் தவறு செய்வது போன்று தான் யோகாசெய்வதும். யோக செய்வது என்பதுபெரும் தவறான செயல் இதில் பலரும் ஈடுபடுகின்றனர்

இனியாவது அவர்கள் இதைக்கைவிட வேண்டும் இல்லாவிட்டால் அவர்களை தீய ஆவி பிடித்துக் கொள்ளும்அவர்களுக்கு பல தீமைகளை அளிக்கும் இவ்வாறு பாதிரியார் கூறியுள்ளார். அமெரிக்கா, பிரிட்டனில் யோகா பயிற்சியில் ஈடுபடுவது இப்போது அதிகரித்து வருகிறது. மதங்களைத் தாண்டி பல மதத்தினரும் யோகா பயிற்சி செய்கின்றனர் பிரபல மொடன் அழகி மடோனா உட்பட ஹொலிவுட் நட்சத்திரங்களும்யோகா பயிற்சி செய்கின்றனர். (அ-5)

## போர் அறிவிக்கும் அதிகாரம் பாகிஸ்தானில் பிரதமருக்கே

(இஸ்லாமபாத்)

அணு ஆயுதத்தைப்பயன்படுத்தவும் மற்ற நாட்டின் மீது போர் அறிவிக்கவும் பாகிஸ்தான் பிரதமருக்கு மட்டும் அதிகாரம் வழங்கும் சட்டதிருத்தம் அந்நாட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான வரைவு சட்ட திருத்தத்தை பாகிஸ்தான் மக்கள் கட்சி உருவாக்கியுள்ளது.

1999இல் கார்கில் போர் இந்தியா மீது திணிக்கப்பட்டது. அப்போது பாகிஸ்தானில் இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப் இந்தப் போருக்கு வழி வகுத்தார்.

அது போன்ற சூழ்நிலையைத் தடுக்கும் நோக்கில் போர் அறிவிக்கும் அதிகாரத்தை பிரதமருக்கு மட்டும் வழங்க அந்நாட்டின் சட்டம் திருத்தப்பட்வுள்ளது.

இந்த வரைவு சட்டதிருத்தம் ஆளும் கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 1990இல் கார்கிலில் இராணுவ நடவடிக்கை எடுப்பது குறித்து இராணுவத் தள பதி முஷாரப் என்னிடம் அனுமதி பெறவில்லை என்று அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறினார்.

இந்த கருத்தை முஷாரப் மறுத்தார். கார்கிலில் தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்ததற்காக முஷாரப் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று சமீபத்தில் நவாஸ் ஷெரீப் கூறியிருந்தார்.

அணு ஆயுதத்தை பயன்படுத்தும் அதிகாரம் தற்போது பாகிஸ்தான் அதிபரிடம் உள்ளது. அந்த அதிகாரத்தை பிரதமருக்கு மாற்ற சட்டம் திருத்தப்படுகிறது.

## வெள்ள அபாயத்தை எதிர்நோக்கும் சீனாவில் 2 இலட்சம் பேர் பாதுகாப்பு தேடி பெயர்வு

(பீஜிங்)

சீனாவில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 2இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

சீனாவில் தென்மேற்கில் கடந்த மே 12 ஆம் திகதி கடும் பூகம்பம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் இதில் உயிரிழந்தனர். அதே நேரத்தில் மலைப்பகுதியில் ஜியாங் ஜியாங் ஆற்றின் குறுக்கே மண் சரிந்தால் அங்கு மிகப்பெரிய ஏரி உருவாகிவிட்டது.

இதேபோல, 35 புதிய ஏரிகள் உருவாகி விட்டன. அந்த ஏரிகள் உடையும் அபாயத்தில் உள்ளன. எனவே அப்பகுதியில்வசிக்கும்சுமார் 2 லட்சம் பேரை மீட்புக்குழுவினர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களை இது போல பாதுகாப் பானஇடங்களுக்கு அழைத்துச் செல்ல அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக மோசமானபாதிப்பை சீனாவில் இந்த பூகம்பம் ஏற்படுத்தியுள்ளது. கட்ட இடிபாடு களில் சிக்கி இறந்தவர்கள் 68, 858 பேரின் உடல்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ளன. 18, 618 பேரை காணவில்லை நாலரை கோடி மக்கள் இந்த பூகம்பத்தால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். சீன அதிபர் ஹூஜிந்தாவ் பூகம்ப த் தால் மிகவும் பாதிக்கப்பட்ட ஹான்ஜோங் நகருக்கு சனிக் கிழமை சென்று மீட்பு பணிகளைப்பார்வையிட்டார்.(அ-5)

# சம்பூர் அனல் மின் திட்டத்தின் பின்னணியில் பறிக்கப்பட்ட தமிழர் நிலங்களும் இந்தியாவின் இராஜதந்திரமும்

## லக்பிம வார ஏடு ஆய்வு

தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடமான சம்பூரில் இந்தியா உதவியுடன் அரசாங்கமானது அனல்மின் திட்டத்தை அமைப்பதன் பின்னணி குறித்து கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான 'லக்பிம' விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

'லக்பிம' ஏட்டில் வெளியாகியுள்ள அக்கட்டுரையின் தமிழ் வடிவம் வருமாறு,

சம்பூர் அனல் மின் திட்டம் உத்தேசிக்கப்பட்ட முறையில் முன்னெடுக்கப்படும் என்று மின்சார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த திட்டத்தின் மூலம் பாரிய அளவிலான பொதுமக்கள் இடம்பெயர வேண்டியநிலை ஏற்படும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அனல்மின் வலு கூட்டுத்தாபனத்தினால் சாத்திய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்தத் திட்டம் அமைக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 2012 ஆண்டு இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய முடியும் எனவும் கூறப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு படைத்தரப்பிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் காரணமாக சம்பூர் பிரதேச மக்கள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் தற்போது இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வருகின்றனர். சம்பூர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை அதி உயர் பாதுகாப்பு வலயமாக அரசாங்கம் அறிவித்தது.

**வரலாற்று பதிவு**

சம்பூர் பிரதேச மக்கள் அச்சம் காரணமாக அப்பிரதேசத்தை விட்டு வெளியேறியுள்ளனர். வெளியேறிய பலரிடம் தங்களின் உடமைகளை உறுதிப்படுத்தக்கூடிய எவ்வித ஆவணங்களும் தற்போது கைவசம் இல்லை. எனினும், இந்த குடும்பங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினால் குடியமர்த்தப்பட்டவர்கள் என அரச அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

பிரதேச மக்களின் வீடுகள் தரை மட்டம் ஆக்கப்பட்டுள்ளனர். எனினும் பல தலை முறைகளாக அப்பிரதேசத்தில் அவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இரண்டாம் இராஜசிங்க மன்னனினால் கோணேஸ்வரத்திற்கு பதிலீடாக தம்பலாகாமத்தில் ஓர் கோயில் அமைக்கப்பட்டதாகவும் கோயிலுக்கு தொண்டாற்றும் பணிகள் சம்பூர் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் டச்சு வரலாற்றுப் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பூர் ஓர் மிகச் சிறந்த விவசாய நிலம் என்று மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர் ஒன்றியத்தைச் சேர்ந்த ராஜன் கூல் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின் நிலையத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடம் அதுவல்ல என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

**மக்களின் கருத்து அறியப்படவில்லை**

அந்தப் பிரதேச மக்களிடம் இது குறித்து எவ்வித கருத்தும் அறியப்படவில்லை. இந்த நிலைமை அக்கிராம மக்களை எந்தளவுக்கு பாதிக்கும் என்பது பற்றி எவரும் கவலைப் படவில்லை. ஏறிகணைத்தாக்குதல்கள் காரணமாக பிரதேச மக்கள் வெளியேறினர். அந்த சம்பவங்களில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பது பற்றிக்கூட அரசாங்கம் கவலைப் படவில்லை. அந்தப்பிரதேச மக்களிடம் கருத்துக்கள் அறியப்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்கு நியாயமான சலுகைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் ராஜன் கூல் குறிப்பிட்டார்.

இந்த விடயங்களின் மூலம் அரசாங்கத்தின் நேர்மைத்தன்மையின் நிலைமை எதுவென்பது தெளிவாக புலப்படுகின்றது.

அந்தப்பிரதேச மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படாது என அரசாங்கம் குறிப்பிடுகின்றது. மறுபுறத்தில் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் பிரதேச மக்களிடம் வேறு இடங்களுக்கு செல்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் கையெப்பங்களை அரசாங்கம் தந்திரமாக பெற்றுக்கொள்கின்றது.

**வேறு இடங்களில் வசிக்க மக்கள் மறுப்பு**

இதன் மூலமாக சம்பூர் மக்கள் வேறு இடங்களில் வசிப்பதனை நிராகரித்துள்ளமை தெளிவாக புலப்படுகின்றது.

ஏனெனில் மாற்றீடாக வழங்கப்படவுள்ள பிரதேசங்கள் மிகவும் மோசமான பயனற்ற பிரதேசங்களாக காணப்படுகின்றன. சம்பூருக்கு மாற்றீடாக பரிந்துரைக்கப்பட்டுள்ள ரால்கி-மகாவலி கங்கை பெருக்கெடுத்து ஓடும் காலங்களில் நீரில் மூழ்கிவிடும். மற்றைய தென்பகுதியில் வரட்சி நிலமை காணப்படுகின்றது. இந்தத் திட்டம் இந்தியாவின் மின் நிறுவனத்திற்கும் மின்சார சபைக்கும் இடையிலான கூட்டுமுயற்சியாகும் என்று இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் தகவல் அதிகாரி தினகர் அஸ்தான தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல இடங்கள் ஆய்வு செய்யப் பட்டன. தொழில் நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியங்களின் அடிப்படையில் மின் திட்டத்திற்கான இடம் ஒதுக்கீடு செய்யப் படுகிறது.

சம்பூர் பிரதேசத்தில் மின் திட்டம் அமைக்கப்படவேண்டும் என்று இந்திய அரசாங்க மின் நிறுவனம் பரிந்துரைக்க வில்லை என்று 2007ஆம் ஆண்டு இந்தியத் தூதரகப் பேச்சாளர் நக்மா மாலிக் தெரிவித்துள்ளார்.

**தமிழீழ விடுதலைப்புலிகளும் எதிர்ப்பு**

தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் சம்பூர் பிரதேசத்தில் மின் நிலையம் அமைக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

சம்பூரில் மின் நிலையத்தை அமைப்பதன் மூலம் சுற்றுலா துறை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித் தார். பாரிய கப்பல்களின் மூலம் நிலக்கரியை இறக்குமதி செய்ய சம்பூர் மிகவும் உசிதமான இடமாக அமைந்துள்ளது.

பாரிய கப்பல்கள் போக்குவரத்து செய்யக்கூடிய அளவு ஆழ் கடல் பரப்பு காணப்படுகின்றது. பிரதேச மக்கள் இடம் நகர்த்தப்பட்டமை தொடர்பாக வினவிய போது இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வுபெற்றுக்கொடுத்ததாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறு எனினும் உயர் பாதுகாப்பு வலயங்களில் எவருக்கும் தங்க அனுமதி இல்லை என குறிப்பிடப் படுகின்றது.

**இராணுவ கேந்திர முக்கியத்துவம்**

இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக சம்பூர் கருதப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சம்பூர் பிரதேசத்தை இராணுவத்தினர் விடுவிப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் பல்வேறு கனகரக ஆயுதங்களை சம்பூர் பிரதேசத்தில் கொண்டுவந்ததாகத் தெரிய வருகிறது.

திருகோணமலைத்துறைமுகம், பிரீமா மா ஆலை உள்ளிட்ட மிக முக்கிய இலக்குகள் காணப் படுகின்றமையே இதற்கு பிரதான காரணம் என தெரிவிக்கின்றார்.

பொதுமக்களை சம்பூர் பிரதேசத்தில் குடி அமர்த்தினால் படிப்படியாக விடுதலைப்புலிகளும் பிரவேசிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

**சூழல் மாசடையும் பிரச்சினை**

இந்த மின்சார திட்டத்தின் மூலம் பாரிய சூழல் பிரச்சினை உருவாகக்கூடும். மூதூர் கிழக்குப்பிரதேசத்தில் 20 ஆயிரம் ஏக்கரை ஒதுக்குவதன் மூலம் 16 ஆயிரம் மக்கள் இடம் பெயர வேண்டி ஏற்படும்.

இந்த பிரதேச மக்கள் அடையக்கூடிய பாதிப்புகள் குறித்து அரசாங்கம் எந்தவித கரிசனையும் காட்டவில்லை என ராஜன்கூல் தெரிவித்துள்ளார்.

சுமார் 50 அனல் மின் நிலையங்களை அமைக்கக்கூடியளவு நிலத்தை அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது. சம்பூர் பிரதேச மக்களை இடம் நகர்த்த வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

மின்சார திட்டங்களை அமுல் படுத்துவதன் மூலம் இராஜ தந்திர காய் நகர்த்தல்களை இந்தியா மேற்கொள்வதாக இந்திய ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

பிராந்தியத்தின் அபிவிருத்தி மற்றும் ராஜ தந்திர விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு இந்திய அரசாங்கத்தின் ஓர் தந்திரோபாயமாக மின்சாரத் திட்டம் அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தியாவில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மின் வலுப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முக்கிய உபய மாகவே பிராந்தியத்தின் பல நாடுகளுடன் கூட்டு மின்சக்தி திட்டங்களை அமுல்படுத்த இந்தியா முனைப்பு காட்டிவருவதாக அந்த ஊடகவியலாளர் சுட்டிக்காட்டியுள்ளார் என அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

## மலையகத்தில் அதிகரித்து வரும் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் பல்வேறு வழிகளில் தமது செயற்பாடுகளை வியாபித்துள்ளதாக சிலுமின வார ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ள பல இளைஞர்கள் யுவதிகளின் பூர்வீகம் மலையகம் என தெரிவிக்கப்படுகிறது.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் ஆயிரக் கணக்கான மலையகத் தமிழர்கள் வடக்கு கிழக்கில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

**உயிரைப்பாதுகாக்க இடம்பெயர்ந்த மலையக தமிழர்களின் வாரிசுகள்**

இவ்வாறு சரணாகதியடைந்த பல தமிழர்களின் வாரிசுகளே இன்றைய தமிழீழ விடுதலைப் புலிகளின் பல பிரிவுகளின் முக்கிய போராளிகள் என சிலுமின தனது ஆய்வுக் கட்டு ரையில் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் கல்வி பயின்று தற்போது மலையகப் பகுதிகளில் உயர் பதவிகளை வகிக்கும் பெரும்பான்மையானோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**முக்கிய பணியில் அதிபர், ஆசிரியர்**

குறிப்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பல முக்கிய பணிகளில் இவர்கள் ஈடு பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் மலையகப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட அதிபர் மற்றும் உப அதிபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் மலையக இளைஞர், யுவதிகள் பலர் வடக்கில் ஆயுதப் பயிற்சிகளை முடித்துக் கொண்டவர்கள் என அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு முறையான கல்வி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் முறையான கல்வியைப் பெறு வதில்லையென தகவல்கள் கிடைத்துள் ளதாக தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது. சுனாமி பேரனர்த்தத் தில் பெற்றோரை இழந்த சிறுவர்களே அதிகமாக இந் நிலைக்கு தள்ளப்பட்டுள்தாக சிறுவர் பராமரிப்பு அதி கார சபைத் தலைவா ஜெகத் வெல்லவத்த தெரிவித்துள்ளார். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பொறுப் பேற்ற பாதுகாவலர்களே இந்த நிலைமைக்குப் பொறுப்புக்கூறவேண்டும் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் முறையான கல்வியைப் பெற் றுக் கொள்ளாத மற்றும் கல்வி கற்க முடியாத சூழ் நிலையில் உள்ள பிள்ளைகளின் தகவல்களைத் திரட்டி வரு வதாக சிறுவர் பராமரிப்பு அதிகார சபைத் தலைவர் கூறினார். இது போன்ற பிள்ளைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டி அவர்களுக்கு மீண்டும் முறையான கல்வியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-7)

## கிராமப்புறங்களுக்கு மின்சாரம் வழங்க 68 சிறிய மின்சார ஆலைகள்

கிராம புறங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக 68 சிறிய மின்சார ஆலைகள் அமைக்கப்பட இருக்கின்றன. இவை சிறிய நீர்வீழ்ச்சி மற்றும் நீர் வளங்களை பயன்படுத்தி 100 மெகா வோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை இந்த திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக பல தனியார் நிறுவனங்களுக்கு அங் கீகாரத்தை வழங்கியுள்ளது.

தற்போது சுமார் 114 மெகாவேட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 98 சிறிய மின்சார உற்பத்தி நிலையங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

(அ-7)

## குசேலன் படப்பிடிப்பு முடிந்ததும் இமயமலை செல்கிறார் ரஜனிகாந்

(சென்னை)

நடிகர் ரஜினிகாந் தியானம் செய்வதற் காக நாளை மறு தினம் இமயமலை பயணமாகிறார். 15 நாட்கள் கழித்து அவர் சென்னை திரும்புவார்.

ரஜினிகாந் ஒவ்வொரு படத்தில் நடித்து முடித்ததும் இமய மலை சென்று தியானம் செய்வது வழக்கம். இப்போது அவர் பி. வாசு டைரக்ஷனில் குசேலன் என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இப்போது குசேலன் படத்தின் இறுதிக் கட்ட படப்பிடிப்பு கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டத்தில் உள்ள குட்ட நாட்டு பகுதியில் நடந்து வருகிறது. அங்கு நடிகைகள் நயன்தாரா, மம்தா, மோகன்தாஸ் ஆகியோருடன் ரஜினிகாந் ஆடிப் பாடும் ஒரு பாடல் காட்சியும் சில முக்கிய காட்சிகளும் படமாக்கப்பட்டு வருகின்றன.



இயற்கை எழில் சூழ்ந்த வேம்ப நாடு ஏரிப் பகுதியில் இந்தப்பாடல் காட்சி படம் பிடிக்கப்பட்டு வருகிறது. ஏரியில் பாம்பு வடிவ படகுகளில் வைத்து பாடல் காட்சி படம் பிடிக்கப்பட்டது. படப் பிடிப்புக்காக ரஜினிகாந் வேம்ப நாடு ஏரிக்கரைக்கு வந்தபோது அவரைக் காண ஏராளமான ரசிகர்கள் திரண்டு இருந்தனர். படப் பிடிப்புக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டு உள்ளன.

இந்தப் படப்பிடிப்பையொட்டி ரஜினிகாந் ஆலப்புழையில் உள்ள கடலோர தங்கும் விடுதி ஒன்றில் தங்கி இருக்கிறார் அங்கும் பலத்த பாதுகாப்பு செய்யப்பட்டு உள்ளது. படப்பிடிப்பு முடிவடைவதால் 5ஆம் திகதி மாலை ரஜினிகாந் திருவணந்த புரத்தில் இருந்து விமனம் மூலம் டெல்லி செல்கிறார். அங்கி ருந்து அவர் இமய மலையில் உள்ள ரிசிகேஷ் பயணமாகிறார். ரிசிகேஷில் அவர் 15 நாட்கள் தங்கியிருந்து தியானம் செய்வார் அதன் பிறகு அவர் சென்னை திரும்ப திட்டமிட்டு இருக்கிறார். (ஓ-5)

உன்னுடைய தேகாரோக்கியம் நல்ல நிலையில் இருக்க வேண்டுமானால் உனது உணவு விடயங்களில் ருசியைப் பார்க்கக் கூடாது.

-பிளாட்டோ

வலம்புரி

## உணவுச் சாலை வைத்திருப்போரிடம் அன்பான வேண்டுகோள்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பது தமிழ்ப் பழமொழி. எனவே, உணவை வழங்குவோர் யாராக இருந்தாலும் அவர்கள் உயிரைக் காற்றுபவர்கள் என்பதே பொருளாகும்.

இங்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பதற்குள் உணவு கொடுத்து உயிரைப் பாதுகாக்கும் செயலை மட்டும் குறிக்கவில்லை.

மாறாக, உண்டியில் ஏற்படக் கூடிய தவறுகள் மனித உயிரைக் காவு கொண்டு விடும். எனவே, நல்ல - சுத்தமான பழுதடையாத உணவைக் கொடுப்பதனூடாக உயிரைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்தும் உள்ளடங்கியிருப்பதைக் காண முடியும்.

ஆக, உணவை வழங்குவோர் அவற்றினை தரமானதாக - தொற்றுக்கள் அற்றவையாக வழங்க முன்வர வேண்டும். அதிலும் குறிப்பாக உணவுச் சாலைகளை வைத்திருப்போர் மற்றும் உணவுப் பண்டங்களைத் தயாரித்துக் கடைகளுக்கு விநியோகிப்போர் மிகவும் அவதானமாக உணவுப் பண்டங்களைத் தயார் செய்வது அவசியமாகும்.

யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் மரியதாசன் அவர்களின் கருத்துப்படி யாழ்.மாநகரத்தில் தற்போது பரவிவரும் நெருப்புக் காய்ச்சலுக்கான காரணம் உணவுச் சாலைகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களை மக்கள் உண்பது எனக் கூறியுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரியின் மேற்படி கருத்துக் குறித்து உரியவர்கள் கவனம் எடுப்பது கட்டாயமானதாகும்.

நெருப்புக் காய்ச்சல் தொற்று என்பது யாழ். மாநகரத்திற்குள் மட்டும் நின்று விடாது. மாறாக அது எங்கும் பரவும் அபாயம் உண்டு. நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு ஆளாகி உரிய சிகிச்சை எடுக்காத சந்தர்ப்பத்தில் மரணத்தின் எல்லைக்குக் கூடச் செல்லும் ஆபத்து உண்டென்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

மனித உயிரைக் காவு கொள்ளக் கூடிய வகையில் உணவைத் தயாரிப்பது மிகப் பெரும் பாவச் செயலாகும். எனவே உணவுச் சாலைகளை நடத்தும் ஒவ்வொருவரும் தம்மால் வழங்கப்படும் உணவுப் பண்டங்கள் சுத்தமானவை- பழுதடையாதவை என்பதை உறுதி செய்து அவற்றை விற்பனை செய்ய வேண்டும்.

இதற்கு உணவுச் சாலைகளில் பணியாற்றுவோரை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்துவது மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனையைப் பெற்று அதன் பிரகாரம் நடைமுறைப்படுத்துவது, பணியாளர்களுக்கு உணவுச் சுகாதாரம் பற்றிய கருத்தரங்குகளை நடாத்துவது போன்றவற்றை ஒழுங்கமைத்து அவற்றைச் சீராக மேற்கொள்வதன் மூலம் தொற்றுக்கள் அற்ற பாதுகாப்பான உணவை பொதுமக்களுக்கு வழங்க முடியும்.

# ஐ.நாவிலிருந்து விரைவில் இலங்கை தூக்கி எறியப்படும் நிலை உருவாகும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேசத்தின் எதிர்பார்ப்புக்கள் மறுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மனித உரிமைப் பேரவையில் இருந்து நீக்கப்பட்ட இலங்கை மிக விரைவில் ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமையில் இருந்தும் தூக்கி எறியப்படும் நிலை உருவாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அடிப்படை உரிமைகளை இல்லாது செய்து கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தை அடிப்படையாக வைத்து சர்வதேச அழுத்தத்தின் உச்சக் கட்டமாக இலங்கை மீது பொருளாதார தடையைக் கொண்டு வருவதே பயனுள்ளதாக அமையும் என்றும் அவர் சொன்னார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டுக்குள் இடம்பெற்று வருகின்ற அடிப்படை உரிமை மீறல், மனித உரிமை மீறல்கள், கடத்தல்கள், கப்பம் அறவிடுதல், படுகொலைகள் போன்றவற்றில் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் குறித்து அரசாங்கம் கவலைப்படுவதாக இல்லை.

பேரினவாதம் பெருக்கெடுப்பதற்கு ஆதரவாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் மகிந்த ரஜபக்ஷவின் அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் இருந்து இலங்கை ஓரங்கட்டப்பட்டுள்ளமை மற்றும் தமது முட்டாள்தனமான செயற்பாடுகளை சர்வதேசம் புரிந்துகொண்டு விட்டது என்பது குறித்தும் அலட்டிக்கொள்ளாத அரசங்கமாகவே இருக்கிறது.

சர்வதேசத்திடம் பாடம் படித்த பேரினவாத அரசாங்கம் அதன் பிறகாவது திருந்தி இருக்கலாம்.

ஆனால் திருந்தவில்லை . திருந்துவதற்கு முயற்சிக்கவும்மில்லை. அங்கத்துவத்தை இழந்துவிட்ட நிலையிலும் இங்கு இடம்பெற்று வருகின்ற வன்முறைகள், படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்திருக்கின்றன.

இதனை தடுத்து நிறுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏமாற்றுக்கார அரசாங்கத்திடம் இல்லை.

இந்த நிலை நீடிக்குமாக இருந்தால் அதி விரைவிலேயே ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமையும் பறிக்கப்பட்டு விடும் நிலையை தவிர்க்க முடியாது.

இலங்கை அரசாங்கத்தின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளை ரசித்துக் கொண்டிருக்கும் தேவை சர்வதேசத்திற்கோ அல்லது ஐக்கிய நாடுகள் சபைக்கோ கிடையாது. இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் இலங்கை மீது பாரிய அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கிறது.

இதன் உச்சக்கட்டமாக பாரிய பொருளாதாரத் தடையை அமுல்படுத்திக் கீழ் மட்ட சிந்தனையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கைக்கு சர்வதேசம் தண்டனை வழங்கவேண்டும்.

இதன் மூலமே சிங்களப் பேரினவாதத்தில் ஊறிப்போயுள்ள அரசாங்கத்தை பணியவைக்க முடியும். அதன் மூலமே இந்நாட்டில் இடம்பெற்று வருகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்ட முடியும்.

அரசாங்க அமைச்சர்கள் சிலர் இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டால் நாட்டில் உள்ள பிரச்சினைகள் அதிகரிக்கும் எனக் கூறுகின்றனர்.

தற்போது இங்கு நடந்து கொண்டிருப்பது என்னவென்று அந்த அமைச்சர்களால் புரிந்து கொள்ள முடியாத அளவில் இருக்கின்றனர்.

இருக்கின்ற பிரச்சினையே உச்சத்தில் இருக்கும் போது இதனைவிட அதிகமாக எந்த விதமான பிரச்சினைகளும் எழப்போவதில்லை. எனவே அரசாங்கத்தின் யோசனைகளைப் புறந்தள்ளிவிட்டு நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தை சிந்தித்து பொருளாதார தடை விடயத்தை சர்வதேசம் உடனடியாக அமுலுக்கு கொண்டுவரவேண்டும் . (அ-5)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறையில் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை வடமராட்சி பிரதேசத்திலுள்ள வைத்திய நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அலுவலகம் தொடர்பான பிரச்சினைகள் வைத்திய நிறுவனம் தொடர்பான பிரச்சினைகள், தேவைகள், வடமராட்சி பிரதேசத்தில் காணப்படுகின்ற சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள் என்பன பற்றி நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

பிரச்சினைகள் தொடர்பான அலுவலர்கள் தமது கடிதங்களை தங்களது நிறுவனத் தலைவர்களின் சிபார்சுடன் அன்றைய தினம் கொண்டுவரல் வேண்டும் என சுகாதார சேவைகள் யாழ்ப்பாணப் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.(சு)

## இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தூய ஒளி சுற்றுக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சென். அன்ரனிஸ் வி.க (பி)யை எதிர்த்து பாடுமீன் (ஏ) விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 4 மணிக்கு மகாத்மா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (சு-5)

# இந்தியாவும் உலக நாடுகளும் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை

(அரியலூர்)

இலங்கை மீது உலக நாடுகள் பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

அரியாலூரில் ஞாயிற்றுக்கிழமை அவர் அளித்த பேட்டியில்,

இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இலங்கையில் தமிழர்கள் கடந்த 60ஆண்டுக்ளாக ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். கடல் எங்களைப் பிரித்தாலும் தொப்புள் கொடி உறவு தமிழகத்துடன் தொடர்கிறது.

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இலங்கை அரசின் இனப்படுகொலைகளை சர்வதேச நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. தனது மனித உரிமை மீறல்கள் வெளி உலகிற்கு தெரியக்கூடாது என்பதாலேயே மனித உரிமை ஆணைய அலுவலகம் அமைக்க இலங்கை அரசு தயக்கம் காட்டிவருகிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போரால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவுகளைச் சமாளிக்க இலங்கைக்கு உலக நாடுகள் உதவி வருகின்றன.

இந்தியாவும் முதல் கட்டமாக ரூ.400 கோடி வழங்கியுள்ளது.இரண்டாம் கட்டமாக ரூ.400 கோடி வழங்கவுள்ளது.

இத்தகைய உதவிகளை இந்தியாவும் உலக நாடுகளும் நிறுத்த வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். அப்படி செய்தால் தான் இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வரும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா நடுநிலையுடன் செயல்பட வேண்டும்.

இலங்கையில் இராணுவத்தளம் அமைக்கும் முயற்சியில் சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் முயன்று வருகின்றன. இது இந்தியாவுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இதைக் கண்டித்து தமிழ் எம்.பிக்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்போம் என்றார் சிவாஜிலிங்கம். (அ-5)

ஓலைச் சுவடிகள் 36

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### இஞ்சிக் கூட்டில்லாத விருந்து உண்ணக் கூடாதோ?

இஞ்சியில்லாத விருந்து உண்டதாக அறிந்தால் ஏதோ பெரும் விபத்து நேர்ந்து விட்டதாக நம் பண்டைய மக்கள் கருதியிருந்தனர். சரித்திரத்திலும், புராணத்திலும், இன்றைய காலத்திலும் இஞ்சியின் மேன்மை பெரிதாக வர்ணிக்கப்படுகின்றது.

மலையாள இலக்கியத்தில் மிகப் பிரசித்தியான ‘பறயிபெற்ற பந்திருகுலங்கள்’என்ற கதையைப் பார்க்கும்போது, கதை ஆரம்பிப்பதே இஞ்சிக் கறியின் விவரணத்துடன் என்பதைக் காணலாம். ஆயிரம் கறிகளுக்கு சமமாக இஞ்சியை சிறப்பித்து அதைத் தயாரித்து பரிமாறும் சாமர்த்தியம் வெளிப்படுத்திய பெண்மணியை வரருசி தன் மனைவியாக்கிக் கொண்டான்.

இலையிட்டு விருந்து பரிமாறும்போது முதலாவதாக இலையில் வைப்பது இஞ்சிக் கூட்டு. ஆனால் கடைசியில் அருந்துவதும் இஞ்சியே. இஞ்சியில்லாமல் விருந்துண்ணுவதில் அர்த்தமில்லை என்றும் அதைவிட சாப்பிடாமல் எழுந்து செல்ல வேண்டும் என்பதும் அன்று எழுதிவைக்காத விதிமுறை. இஞ்சியின் மருத்துவ குணங்களை நவீன மருத்துவத்துறை அங்கீகரித்துள்ளது.

இரு குடல்களையும் சுத்தம் செய்ய சக்தி வாய்ந்த இஞ்சித்தயிர் குடித்தால் மூலவியாதி நீங்கும் என்று மருத்துவத்துறை கண்டறிந்துள்ளது. உணவின் வாயிலாக வயிற்றுக்குள் சென்று சேருகின்ற பழையவை, வேகாதவை முதலியவற்றை ஜீரணிக்கும் சக்தி இஞ்சித் தயிருக்குண்டு. இஞ்சி, கறிவேப்பிலை, மிளகாய், சிறு வெங்காயம் என்பவற்றை நன்றாக நொறுக்கி தயிரில் சேர்த்து கலக்கித் தயாரிப்பதே இஞ்சித்தயிர் ஆகும்.

# கொக்குவிலில் திருடர்கள் அட்டகாசம் இந்து மதகுரு தாக்குதலில் படுகாயம்

(கொக்குவில்)

கொக்குவில் கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற திருடர்களின் தாக்குதலில் இந்து மதகுரு ஒருவர் படுகாயமடைந்தார். மற்றொரு இந்து மதகுருவின் மோட்டார் சைக்கிள் திருடர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன் சில வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் திருடர்களின் தாக்குதலுக்கு இலக்கான எஸ்.ஜெகநாதஐயர் (வயது-47) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப மதகுருவின் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அவரைக் கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன் அங்கிருந்த பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

அப் பகுதியில் மற்றொரு வீட்டிற்குச் சென்று கதவைத் திறக்குமாறு திருடர்கள் கோரிய போதும் வீட்டின் உரிமையாளர் திறக்க மறுக்கவே அவ்வீட்டின் ஜன்னல் கதவுகளைச் சேதப்படுத்தி விட்டுத் திருடர்கள் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஸ்ரேசன் வீதி, கோண்டாவிலில் மதகுரு ஒருவரின் வீட்டில் நின்ற மோட்டார் சைக்கிளைத் திருடர்கள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர் பின்னர் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளையும் சேதப்படுத்திவிட்டுச் சென்றதாக முறையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவங்களையடுத்துக் கொக்குவில் மற்றும் கோண்டாவில் பகுதிகளில் பதற்றம் நிலவுகின்றது. (ச)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் முப்படையினர் இணைவு

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிக்காக அனர்த்தம் ஏற்பட்ட சில மாவட்டங்களுக்கு முப்படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவர்களின் பணிக்காக படகுகள், ஹெலிகொப்டர்கள் மற்றும் வாகனங்கள் சிலவும் கையளிக்கப்பட்டுள்ளன.

காலி, களுத்துறை மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களுக்கே முப்படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் தொடர்ந்து கூறியதாவது,

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்காகக் கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் என முப்படையினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையைச் சேர்ந்த 150 பேர் 16 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 16 படகுகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். காலி மாவட்டத்தின் நெலுவ, தவளம, உடுகம, நாகொட, கினிதுவ; இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான, தெஹியோவிட்ட மற்றும் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம, பதுரளிய, அங்குருவாதொட்ட, குக்குலேகங்க போன்ற பிரதேசங்களுக்கே கடற்படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ச-5)

# இரண்டு சடலங்கள் கம்பஹாவில் மீட்பு

(கொழும்பு)

கம்பஹா மாவட்டம் கந்தானவில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் ஞாயிற்றுக் கிழமை இரவு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை அடையாளம் காணப்படாத இந்தச் சடலங்கள் இரண்டும் சுமார் 20 வயது முதல் 25 வயதுடைய இளைஞர்கள் உடையது என்று கந்தான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்கள் இரண்டிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. 4 நாட்களுக்கு முன்னர் இவர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே கந்தான சதுப்பு நிலப் பகுதியில் இருந்து இந்தச் சடலங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச் சடலங்கள் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னர் வத்தளை பமுனுகம பகுதியில் உள்ள சதுப்பு நிலங்களிலிருந்தும் அடையாளம் தெரியாத சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# நாடாளுமன்றம் 5 ஆம் திகதி கூடுகிறது

(கொழும்பு)

ஆறாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது சபை அமர்வுகள் நாளை மறுதினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது.

கடந்த மே மாதம் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்பட்டது.

இக் கூட்டத் தொடரை சபாநாயகர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புதிய கூட்டத் தொடர் ஆரம்ப தினத்தன்று அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதமும் நடத்தப்படவுள்ளது. (ச-5)

# தமிழர்களுக்கும் இந்தியர்களுக்கும் வெளிநாடுகளில் பாதுகாப்பு இல்லை

## வை.கோபாலசாமி தெரிவிப்பு

(சென்னை)

தமிழர்களுக்கும் இந்தியர்களுக்கும் வெளிநாடுகளில் உரிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. அமெரிக்காவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி அண்மையில் இந்தியர்கள் பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் பனவடலி சத்திரத்தை அடுத்த நடுவக்குறிச்சியில் ம.தி.மு.க. பிரமுகரின் இல்லத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், கடந்த சில காலமாக தமிழர்களுக்கும் இந்தியர்களுக்கும் வெளிநாடுகளில் உரிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை.

இந்திய இளைஞர்கள் வேலை கிடைக்கும் என்ற ஆவலில் சொத்துக்களை விற்றும் கடன் வாங்கியும் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்கின்றனர். சமீபத்தில் அமெரிக்காவில் வேலை வாங்கித் தருவதாகவும் கிரீன் கார்டு பெற்றுத் தருவதாகவும் கூறி ரூபா 6 இலட்சம் வசூல் செய்து கொண்டு 540 பேரை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று ஏமாற்றியுள்ளனர்.

இந்தியாவில் ஒற்றுமையில்லாமல் விவசாய நிலங்கள் பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 16 ஆம் திகதி சென்னையில் பெரிய மாநாடு நடத்தப் போகின்றோம். அந்த மாநாடு ம.தி.மு.கவுக்கு திருப்புமுனையாக அமையும் என்றார். (ச-5)

# யாழ்ப்பாண இளைஞன் புத்தளத்தில் கடத்தல்

(புத்தளம்)

புத்தளம்- மன்னார் வீதியில் இருந்து தமிழ் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவரை ஆயுததாரிகள் நேற்று முன்தினம் இரவு கடத்திச் சென்றுள்ளனர்.

32 வயதான கணேஸ்வரன் ஸ்ரீதரன் என்பவரே கடத்திச் செல்லப்பட்டவர் ஆவார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## படையினரின்...

சியிருக்கும் விடுதலைப்புலி முகாம்கள் விரைவில் அழிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழீழப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

13-வது திருத்தத்தின் அடிப்படையில் வடக்குக் கிழக்கு இரண்டு தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை ஏற்றுக் கொள்ள முடியாதென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

## குண்டு...

ஏழாலை வடக்கைச் சேர்ந்த வி.விதுஷன் (வயது-5), பி.ஜதுஷன் (வயது-7) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இச் சிறுவர்கள் அவ் வெடிபொருளை விளையாட்டுப் பொருள் எனநினைத்து அதனை எடுத்து வைத்திருந்ததாகக் கூறப்பட்டது. (எ-3.4)

## 150 நாள்கள் போராட்டம்...

இதன் தொடர்ச்சியாக இன்று முதல் 150 நாள்களுக்கு நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பிரசாரங்கள் என்பன முன்னெடுக்கப்படவிருப்பதாக அவர் கூறினார்.

தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் பொருள் விலையேற்றம் மற்றும் எரிபொருள் விலையேற்றங்களால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் எரிபொருள்களுக்கான விலைகளைக் குறைக்க முடியுமென திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டினார்.

இதேவேளை பொருள்களின் விலையேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி தற்பொழுது முன்னெடுத்து வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பரிகாசத்திற்குரியவை என மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஐக்கிய தேசியக் கட்சியே மூலகாரணமாகவிருந்ததென்றும் அவர் கூறினார். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்பேற்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

அத்துடன் சம்பள அதிகரிப்புக் கோரி நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யாழ்.கரை...

உத்தரவிட்டார்.

சம்பவத்தையடுத்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் தமது வாகனங்களில் ஒலிபெருக்கிகளைக் கட்டிக் கொண்டு கரையோரப் பகுதிகளுக்குச் சென்ற படையினர் மாலை 5 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அறிவித்தனர்.

கொழும்புத்துறை, குருநகர், பாசையூர், மணியந்தோட்டம், கொய்யத்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் ஊரடங்குச் சட்ட அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்த அறிவித்தலால் யாழ்.நகரப் பகுதி நேற்றுப் பிற்பகலுடன் வெறிச்சோடியது. கரையோரப் பகுதி மக்களிடையே பதற்றமான நிலை காணப்பட்டது. ஊரடங்குச் சட்ட அறிவித்தலையடுத்து கரையோரப் பகுதிகளில் பெருமளவான படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். (ச-5)

## தமிழ்...

முகாமுக்கு அழைத்துச் சென்று அங்கு பாரிய சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளார்கள்.

தாம் நிர்வாணப்படுத்தப்பட்டுத் தாக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவர்களின் இடமாற்றம் குறித்துப் பலரும் குரல் கொடுத்த நிலையில் கைதிகளின் பாதுகாப்புக் கருதியே அவர்களைப் பூசா முகாமுக்கு அழைத்துச் சென்றதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. (ச-5)

## ரி.எம்.வி.பியைச் சேர்ந்த...

லகத்தில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள சூழ்நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் எருவில்பற்றுப் பிரதேச சபை உப தலைவரும் அவரது உதவியாளரும் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடியில் காத்தான்குடிப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் வியாபாரி ஒருவர் நேற்று முன்தினம் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். இவருடைய ஜனாசா நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு பிரதேச மக்கள் முயற்சித்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி காத்தான்குடிப் பகுதிக்குச் சென்றதாகவும் அவரை அங்கு கூடியிருந்த மக்கள் கடுமையாக விமர்சித்ததாகவும் பிராந்தியச் செய்திகள் கூறுகின்றன. இதனைத் தொடர்ந்து அமைச்சர் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளார்.

அத்துடன் காத்தான்குடிப் பகுதியில் தொடர்ந்தும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு வீதிகள் வெறிச்சோடிப் போயிருப்பதாகவும் தெரியவருகின்றது.

வீதிகளில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாகக் காத்தான்குடிப் பகுதியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)




## கடும் மழையினால் 13 பேர் பலி...

களுத்துறை, காலி, கம்பஹா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களே தொடர்ந்து மழை வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்தின் தலந்த என்ற ஒரு கிராமம் நீரில் மூழ்கியுள்ளது. அங்கு இன்னமும் மீட்புப் பணியாளர்கள் வெளியிடங்களிலிருந்து செல்ல முடியாதிருப்பதாக மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான சமைத்த உணவுகளையும் உலர் உணவுகளையும் உடனடியாக வழங்குமாறு அந்தந்த மாவட்ட அரசாங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருப்பதோடு இதற்காகப் பல மில்லியன் ரூபாய்கள் உடனடியாக தனது அமைச்சினூடாக ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென வெளிநாடுகளின் உதவிகளைக் கோர வெளிவிவகார அமைச்சு திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.? இரண்டாம் ஒழுங்கை பிரவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.